பக்கங்கள்-16 | 06,டிசம்பர்.2020 | விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்

0776906182


# தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


கலையரசி நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி,
புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -324

# சிறைச்சாலை கைதிகளை கோட்டபாய அரசு கொல்லப்போகிறதா?




## தமிழ்க் கட்சிகள் இனவாத அரசாங்கத்தோடு சேர்ந்து பயணிப்பது முஸ்லிம் கட்சிகளுக்கு ஆபத்தானது



## பூகோள அரசுகளால் இலங்கைக்கு ஆபத்து



-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# சிறைச்சாலை கைதிகளை கோட்டபாய அரசு கொல்லப்போகிறதா?




சிறைச்சாலை என்பது குற்றங்கள் செய்த கைதிகளும், குற்றம் நிரூபிக்கப்படாத கைதிகளும், ஆயுள் கைதிகளும், மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் குறிப்பாக தண்டனை நிரூபிக்கப்படாமல் 10 வருடங்களுக்கும் மேல் கைதிகள் இருக்கிறார்கள். பிணையில் வீடு செல்ல முடியாத கைதிகள் இருக்கிறார்கள். களவு, கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சிறு சிறு குற்றங்கள், விவாகரத்து, தாபரத்து வழக்கு என பல வகையாக பிரிக்கலாம். ஒரு சிறைச்சாலையில் தாக்குதல் நடத்தப்படும் பொழுது இதில் ஒட்டுமொத்த கைதிகளுமே தாக்கமடைகின்றார்கள். இதில் குறிப்பாக போதை வஸ்துக்களை சிறைச்சாலைக்குள் அனுமதிக்காது இருந்தாலே பாரிய குற்றங்களை தடுக்க முடியும்.

போதை வஸ்து வியாபார தளமாக ஒரு சில அரசியல்வாதிகளின் பின்னணியுடனும் ஒருசில சிறைச்சாலை உத்தியோகத்தினர்களினதும் நடை முறைகளினால் குறித்த சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் பாவனைகள் இடம்பெறுகின்றன. இதில் இங்க பாரியளவில் வியாபாரங்கள் நடைபெறுகின்றது என்றே கூறலாம். வெலிக்கடை சிறைச்சாலை சுவரில் **'கைதிகளும் மனிதர்களே'** என்ற ஒரு வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் மனிதர்களாக பார்க்கப்படுவதில்லை என்றே இன்றைய, அன்றைய சமூகங்கள் எடுத்துக்காட்டுகின்றது. கடந்த காலத்தில் குட்டிமணி, தங்கதுரை உட்பட பல கைதிகள் வெலிக்கடை சிறைச்சாலையில் கொல்லப்பட்டார்கள். அதனையே ஜீலை கலவரம் (1983) என்று கூறுவார்கள். மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் தமக்கு தேவைப்படுகின்ற விதத்தில் கைதிகளை கொல்லுகின்ற ஒரு நடவடிக்கையை ஒரு வன்முறை கலாச்சாரமாக தூண்டிவிட்டு கைதிகளை கொன்றொழித்தமையினால் அவர்களை சுட்டுக்கொன்றோம் என்று கூறுகின்றார்கள்.

அவ்வாறு இல்லாவிட்டால் வன்முறைகளை இல்லாது ஒழிக்க முடியாது என்பது அவர்களது கருத்து. கடந்த கால அரசாங்கத்திலும் தற்போதைய அரசாங்கத்திலும் சிறைச்சாலை கைதிகள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டால் அல்லது சிறைக்குள் ஏதேனும் கலவரத்தை தூண்டினால் அவர்களை கட்டுப்படுத்துவதாக நினைத்து அரசாங்கத்தால் இழக்கு வைக்கப்பட்ட ஆயுள் கைதிகளை மரண தண்டனை கைதிகளை அல்லது குடு வியாபாரிகளை திட்டமிட்டு கொல்லுகின்ற நடவடிக்கைகளை தற்பொழுது கோட்டாபய ராஜபக்ச அரசு கையில் எடுத்துள்ளது. இந்த வன்முறை கலாசாரம் மாற்றப்பட வேண்டும். நீதி சரியாக நிர்ணயிக்கப்பட வேண்டும். நீதியமைச்சினுடைய கையில் அனைத்து பொறுப்புக்களும் வழங்கப்பட வேண்டும் நீதியமைச்சரை அரசாங்கம் ஒரு பகடைக்காயாக வைத்துள்ளது. அன்றைய நிதியமைச்சராக இருந்த ரவூக் ஹக்கீம் அவர்களையும் அரசாங்கம் ஒரு பகடைக்காயாகவே பயன்படுத்தியது. ஒரு நீதியமைச்சரினால் சரியான முடிவினை நாட்டுக்குள் எடுக்க முடியாது அந்த நீதியை நிலைநாட்ட முடியாது என்று பல சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

இலங்கையின் சிறைச்சாலைகளுள் வெலிக்கடை, மெகசின், சீஆர்பி, போகம்பர, மஹர சிறைச்சாலைகள் பழமை வாய்ந்தவை. அதுமட்டுமன்றி கூடுதலான கைதிகளை அங்கு சிறைவைக்க முடியும். கூடுதலாக கைதிகள் பரிமாற்றங்களை இவ்வாறான சிறைச்சாலைகளுள்ளே ஏற்படுத்திக்கொள்வது வழக்கம். அனைத்து வசதிகளையும் கொண்ட சிறைச்சாலைகளாகவே இவை இருக்கின்றன. இதுபோன்ற சம்பவங்கள் வெலிக்கடை மற்றும் போகம்பர போன்ற சிறைச்சாலைகளில் கடந்த காலங்களில் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு பல கைதிகள் இறந்திருக்கிறார்கள்.

ஆகவே கைதிகள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்த பொழுது சந்தேகத்தின் பெயரில் தடுத்து வைக்கப்பட்ட கைதிகளும் இறந்திருக்கிறார்கள். அதைவிட தண்டனை செய்கின்றவர்களை சவுதி-அரேபியா போன்று வெட்டியும் சுட்டும் கொல்லும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளலாம். சிறைச்சாலைகள் தொடர்பில் பல்வேறு தரவுகள் எம்மிடம் இருக்கிறது. சில பாதுகாப்பு காரணங்கள் கருதி நாம் அதனை இங்கு வெளியிடவில்லை. எவ்வாறு போதைப்பொருள் சிறைச்சாலைக்குள் கொண்டு செல்லப்படுகின்றது, எவ்வாறு தொலைபேசிகள் சிறைச்சாலைக்குள் கொண்டு செல்லப்படுகின்றது, எவ்வாறு பணம் சம்பாதிக்கிறார்கள், ஒரு கைதி சிறைச்சாலைக்குள் எவ்வளவு பணம் கொடுத்து அதற்குள் இருக்கின்றார்கள் என்ற தொடர்பிலும் பல்வேறு ஆதாரங்கள் எம் கைவசம் இருக்கின்றன. அவற்றையெல்லாம் வெளியிட்டால் ஏதேனும் ஒரு சம்பவங்களில் குற்றங்களை செய்து சிறைச்சாலைக்குள் செல்பவர்கள் அங்கு இருக்கக்கூடிய சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியாது என்ற காரணத்தினால் நாம் ஏனைய விடயங்களை வெளிக்கொண்டுவர விரும்பவில்லை. அது கைதிகளுக்கு ஓரளவு மனநிறைவை கொடுத்தாலும் போதைப்பொருள் சம்பந்தமான விடயத்தை இங்கு கூறக்கொள்ள விரும்புகின்றேன். புறா, பூனை, எலி போன்றவற்றினூடாக சிறைச்சாலைக்குள் குடு தற்பொழுது கொண்டுவரப்படுகின்றது. வளர்க்கப்பட்ட புறாக்கள் எலி பூனை போன்றவை இருக்கின்றன.

வெலிக்கடை சிறைச்சாலையில் சப்பல் என்ற பகுதி இருக்கிறது. அதன் கீழ்த்தட்டில் மரண தண்டனை கைதிகள், ஆயுள் கைதிகள் என்பவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் குடு வியாபாரத்தின் மூலம் சிறையில் அடைக்கப்பட்டவர்கள். இவர்கள் தொடர்ந்தும் அங்கு தமது வியாபாரத்தை செய்து பணங்களை ரீலோட் மூலம் வெளியில் அனுப்பி அல்லது அங்கு பணிபுரியும் சிறைச்சாலை அதிகாரிகளை பயன்படுத்தி பணப்பரிமாற்றங்கள் செய்து கொள்கிறார்கள். இவர்களை ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலயம் மட்டுமே வெளியில் விடுவார்கள். ஏனைய நேரங்கள் எல்லாம் குறித்த சிறைச்சாலைக்குள்ளேயே இருக்க வேண்டும்.

கூடுதலான சிறைக்கைதிகள் விரக்தியின் விளிம்பிலேயே இருப்பார்கள். விசாரணைகளுக்கு எடுத்துக்கொள்ளப்படாமலேயே 25 வருடங்களுக்கும் மேல் சிறைத்தண்டனைகளை அனுபவித்து வருகின்றார்கள். குடுத்தொழில் செய்பவர்களுக்கு அரசாங்கம் மரண தண்டனையை வழங்குவதனூடாக இந்த நாட்டில் இதனை கட்டுப்படுத்த முடியும். அல்லது அதனுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகள் பெரும் புள்ளிகளை மறைமுகமாக கொலை செய்வதனூடாக அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்படாது தப்பித்துக்கொள்ள முடியும். சிறைச்சாலைக்குள் போதைகளின்றி இருக்க முடியாத ஒரு சூழ்நிலையினால் சிறைச்சாலைக்குள் புதிதாக செல்பவர்களுக்கு முதற்கட்டமாக இந்த போதை இலவசமாக வழுங்கப்படுகின்றது. அதை குடித்து ருசிகண்டவர்கள் அதை குடிக்காமல் இருப்பது மிகக்கடினம். இதனால் பல குடும்பங்கள் சீரழிந்து போயுள்ளன. சிறைச்சாலையில் இருந்து தங்களது வீட்டிற்கும் மனைவிக்கும் தொலைபேசியினூடாக தொடர்பு கொண்டு ரீலோட் போடுவதனூடாக அதனுடன் பணத்தை பெற்றுக்கொண்டு அந்த பணத்திற்கு சிறைச்சாலைக்குள்ளேயே குடு அடிக்கிறார்கள்.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்றுவருகின்றது. லோக்கல் என்று கூறப்படுகின்ற புகையிலையை அரைத்து அதனை பேப்பரில் சுத்தி பாவிக்கின்றார்கள். தேயிலையை போதையாக பாவிக்கின்றார்கள். பைத்தியக்காரர்கள் பாவிக்கின்ற மாத்திரைகளை அதிகளவு சிறைச்சாலைக்குள் பெற்று அதனை அரைத்து தமது உடலுக்குள் ஏற்றி போதையை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். சம்போவை குடித்து போதையை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். ஓடிக்கலோன் போன்ற பொருட்களும் இவர்களுக்கு போதையாக அங்கு மாறுகின்றது.

கஞ்சாக்களும் சிறைச்சாலைக்குள் கொண்டுவரப்படுகின்றது. திட்டமிட்டு மனிதர்களை தொடர்ந்தும் வன்முறையாளர்களாக சித்தரிக்கின்ற ஒரு நடவடிக்கையாகவே இதனை காணமுடிகின்றது. இதற்கு கோட்டபாய ராஜபக்சவினுடைய அரசாங்கம் தகுந்த நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். இதற்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்ககூடாது. இன்று மக்கள் மத்தியில் சிறைச்சாலையில் இருக்கக்கூடிய அப்பாவி மக்களை இந்த அரசு கொல்லுகின்றது என்ற நிலைப்பாடு தோற்றம் பெற்றுள்ளது.

ஆகவே அரசாங்கம் உடனடியாக சிறைச்சாலை கைதிகளை சக மனிதர்களாக எண்ணி அவர்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என்பதனையே நாம் இங்கு தெளிவுபடுத்துகின்றோம்.

இரணியன்



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## இயற்கை அனர்த்தமும் அரசியல்வாதிகளும்

இன்றைய காலச்சூழ்நிலையில் இயற்கை அனர்த்தத்தால் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இடைத்தங்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக வடபகுதியிலேயே இந்த புறலி சூறாவளி தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த இயற்கை அனர்த்தமானது வருடாவருடம் ஏற்படுவது வழக்கம். ஒன்றில் வெள்ளப்பெருக்கு அல்லது காற்று இதனாலேயே இலங்கை கூடுதலாக பாதிக்கப்பட்டுவருகின்றது. இதில் ஒரு வேடிக்கை விடயம் என்னவென்றால் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணம் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியிருப்பதே. கொரோனா வைரஸினுடைய தாக்கத்தின் போது ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்ற காலமது.

அக்காலகட்டத்தில் அனைத்து அரசியல்வாதிகளும்மக்கள்மக்கள்என்று வீதிக்கிறங்கி நிவாரணப்பொருட்களை வழங்கியிருந்தார்கள். ஆனால் தற்பொழுது அரசியல்வாதிகளும் சரி ஊடகவியலாளர்களும் சரி மக்களுக்கு நிவாரணப்பொருட்களை வழங்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. பிரபல்யம் தேடும் இவர்கள் தற்பொழுது ஏற்பட்டிருக்கின்ற காற்று, வெள்ளப்பெருக்கு இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏன் நிவாரணங்கள் வழங்கி புகைப்படம் எடுத்து முகநூல்களில் போடக்கூடாது. பொதுத்தேர்தல் இடம்பெற்றபொழுது அரசியல்வாதிகள் குறித்த ஊடகவியலாளர்களுக்கு பொருட்கள் பணம் போன்றவற்றை அள்ளி வழங்கினார்கள். இதற்கு அவர்களே தங்களது வாயினால் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்கள்.

மக்களை ஏமாற்றுகின்ற அரசியலும் இந்த அனர்த்த நேரங்களில் இடம்பெறுகின்றன. உதவி என்ற ஒருவிடயம் படம் பிடித்து கொடுக்க வேண்டிய தேவை இல்லை. ஆனால் அரசியல்வாதி என்னும் பொழுது அதனை படம்பிடித்து கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது. அரசியல்வாதிகள் அவ்வாறு தங்களை படம் பிடித்துக்கொள்வது தவறு என்று கூற முடியாது. அது அவர்களின் தொழில்.

ஆகவே அதனை அவர்கள் செய்தேயாக வேண்டும். ஆனால் பொதுச்சேவை செய்கின்றோம் என்ற போர்வையில் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவற்றை மறந்து தமிழ் ஊடகவியலாளர்கள் பணியாற்றுகின்ற விதம் ஆச்சரியத்தை தருகின்றது. தற்பொழுதும் களத்தில் இறங்கி சமூக சேவையாளர்கள் மக்களுக்காக சேவையாற்ற முடியாதவொரு சூழல் ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே மீண்டும் அரசியல்வாதிகளை நாட வேண்டிய நிலை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் தங்களது உதவிகளை ஒத்தாசைகளை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதே இந்த அனர்த்த காலங்களிலும் மக்களுக்கு தேவையாதொன்று என்பதனையே நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

127



எவ்வாறிருந்தபோதும் வேவு மற்றும் தகவல் சேகரிக்கும் அமைப்பு நன்றாக ஒழுங்கமைக்கப்பட்டதாக இருக்க வேண்டும். இதனுள் வெவ்வேறு வகையான தபால் தகவல்கள் உள்ளடக்கப்படுகின்றன. இதனது துணையுடன் கிளர்ச்சியாளர்களின் பிரதேசத்திலும் அதற்கு வெளியேயும் அவசியமான தொடர்பு, பொருட்களை அனுப்புதல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. கெரில்லா வேவு நேரடியாக எதிரியின் பிரதேசத்தில் மெற்கொள்ளப்படுகின்றது. அப்பிரதேசத்தினுள் ஆண்களும் குறிப்பாகப் பெண்களும் நுழைய வேண்டும். அங்கே படிப்படியாக எதிரிச் சிப்பாய்களுடன் நட்பை உருவாக்க வேண்டும். படிப்படியாகச் சாத்தியமான சகல தகவல்களையும் அறிந்துகொள்ள வேண்டும்.

எதிரியுடனான எதிர்பாராத மோதல்கள் ஏற்படும் சாத்தியம் பற்றி தகவல் வேவு அமைப்பு எச்சரிக்கை செய்யவும் வேண்டும். இந்த அமைப்பு நன்றாக ஒழுங்கமைக்கப்பட்டும் தகுதிமிக்க முகவர்களைக் கொண்டும் இருக்குமானால், கெரில்லா முகாம்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படுகின்றது. நாங்கள் முன்னரே குறிப்பிட்டதைப்போல, சகல முன்னணி எல்லைகளிலும் வேவு மேற்கொள்ளப்படுகின்றது அல்லது நடுநிலையான பிரதேசத்திற்கு அருகிலிருக்கின்ற எதிரியின் முன்னணி முகாம்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்படுகின்றது.

இதுதவிர, கெரில்லாஅமைப்பின்வளர்ச்சிப் போக்கிற்கமைய எதிரிப்படைமீதான கெரில்லா வேவு கூடுதலான பரப்பைக் கொண்டிருக்கின்றதுடன், எதிரியின் பின்புலத்தில் அவனது பெரிய படைகளின் நகர்வை முற்கூட்டியே கண்டறியவும் உதவுகின்றது. சரியாகச் சொல்வதனால், கெரில்லாக்களால்கைப்பற்றப்பட்டஅல்லது கட்டுப்படுத்தப்படுகின்ற பிரதேசத்தின் சகல குடிமக்களும் அவர்களின் முகவர்களாகவே விளங்குகின்றனர். ஆனாலும் இதற்காகவெனச் சிறந்த ஆட்களைத் தெரிவுசெய்வது முற்றிலும் பொருத்தமானதாகும். ஏனெனில், மிகைப்படுத்திக்கூறும் பண்புடைய, சூழ்நிலையைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் விளக்கமுடியாத பண்புடைய குடியானவர்களின் கருத்தைப் பூரணமாக நம்பக்கூடாது. வேவு மற்றும் தகவல் சேகரிப்பில் ஈடுபடுகின்ற கட்டமைப்பிலிருந்து மக்கள் ஒத்துழைப்புடனான தொண்டர் அமைப்புக்களை ஒழுங்குபடுத்தக்கூடியதாக இருந்தால், துணை அமைப்புக்களை மாத்திரம் உருவாக்காமல், எதிர்பரப்புரை அமைப்பையும் உருவாக்க வேண்டும்.

இந்த எதிர்ப்பரப்புரை அமைப்பு எதிரிப்படைச் சிப்பாய்கள் மத்தியில் மனவலிமையைக் குறைக்கின்ற வதந்திகளைப் பரப்புவதுடன் அவர்களிடம் தமது சொந்தப் படையில் நம்பிக்கையின்மையும் பயமும் தொற்றிக்கொள்ளும் நிலையையும் உருவாக்குகின்றது. இந்த அமைப்பு அசையுந்தன்மை எனும் பிரதான தந்திரோபாய நடைமுறையை உச்சமாகக் கையாள்கின்றது. எதிரி தாக்கவுள்ள இலக்கைத் துல்லியமாக வேவு பார்த்தால், அதிலிருந்து தப்பித்துக்கொள்வது சிரமமல்ல அல்லது மறுவளமாக, எதிரி எதிர்பார்க்காத திசையிலிருந்து அவனைத் தாக்குவது சிரமமல்ல.

9. இராணுவப் பயிற்சியும் அரசியல் போதனையும் வீரர்களுக்கான இராணுவப் பயிற்சி - இதுவே கெரில்லாப் படைப்பிரிவின் வாழ்க்கையாகும். ஏனெனில், ஆயுதங்களைக் கையாள வீரர்களுக்குக் கற்றுக்கொடுப்பது எவ்வளவு சிரமமென்பது ஒவ்வொரு கட்டளையாளனுக்கும் தெரியும். கட்டளையாளனும் வீரர்களும் ஒரு இடத்திலேயே வசிப்பதால், வீரர்கள் கட்டளையாளனிடமிருந்து ஆயுதங்களைக் கையாளும் திறன், நிலையறியும்அறிவு, உள்ளூர் மக்களுடன் அணுகும் முறை, சமரிடும் முறை போன்ற பலவற்றின் அனுபவங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனால், கெரில்லாப் படைப்பிரிவிடம் இருக்கின்ற விலைமதிக்கப்பட முடியாத காலத்தை நாளாந்தச் சமர்த் தயார்ப்படுத்தலை மேற்கொள்வதில் மாத்திரம் செலவிடக்கூடாது. இதனைக் கணிசமானளவில் விடுவிக்கப்பட்ட பிர தேசம் இருக்கின்றபோதும் மேலதிகமாகத் தயார்ப்படுத்தல் தேவைப்படும் போதும் மாத்திரமே மேற்கொள்ள வேண்டும். இந்நிலைமையில் புதிய வீரர்களுக்கான பயிற்சிக்கூடங்கள் உருவாக்கப்படுகின்றன. இக்காலத்தில் இப்பயிற்சிக்கூடங்கள் மிக முக்கியமான பணிகளை நிறைவேற்றுகின்றன - புதிய வீரர்களைத் தயார்ப்படுத்துகின்றன. கெரில்லா வாழ்வின் சமர் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படாத இவர்கள் கெரில்லா இராணுவத்தின் பிரிவுகளில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாழ்க்கையின் சகல துன்பங்களையும் அனுபவித்த மாத்திரத்தில் அவன் எங்கள் இராணுவத்தில் - கண்டு பிடிக்கப்படமுடியாத இராணுவத்தில் இணைந்து கொண்டு உண்மையான வீரனாக மாறலாம். புதிய போராளிகள் உடற்பயிற்சித் தயார்ப்படுத்தலுக்கு அவசியம் உள்ளாக்கப்பட வேண்டும்.

உடற்பயிற்சிபிரதானமாக இரண்டுவகைப் பயிற்சிகளைக் கொண்டிருக்கின்றது.

1 : நாசகாரவேலை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பின்வாங்கும் போது திடீர்த்தாக்குதல்களை மேற்கொள்வதற்கும் அவசியமான திறமைகளைப் பெற்றுக்கொள்ள உதவுகின்ற உடற்பயிற்சிகள்.

2 : புதியவர்களுக்கு உரனேற்றுகின்ற, அவர்களின் உறுதியைத் திடப்படுத்துகின்ற, களைப்படையச் செய்கின்ற நீண்டதூர நகர்வுப் பயிற்சிகள்.

புதிய போராளிகள் திறந்த வானின்கீழ் வாழ்க்கையை நடத்தக் கற்றுக்கொள்ளவேண்டும். சகல மோசமான காலநிலையையும் சகித்துக்கொள்ள வேண்டும். சுருங்கச் சொன்னால், கெரில்லாப் படைப்பிரிவின் வாழ்க்கைச் சூழலுக்கமைவான சூழலில் வாழ வேண்டும். புதிய போராளிகள் தமது பயிற்சிக்கூடங்களுக்குத் தேவையான சகல விநியோகத்தையும் தாங்களே கவனித்துக்கொள்ள வேண்டும். இதற்காகப் பயிற்சிக்கூடங்கள் பெரியளவு கால்நடைகள், பண்ணைகள், மரக்கறித் தோட்டங்கள், பழத்தோட்டங்கள் போன்றவற்றைக் கொண்டிருக்க வேண்டும். இதன் காரணத்தால், பயிற்சிக்கூடங்கள் கெரில்லா இராணுவத்திற்குச் சுமையாக இருக்கமாட்டாது. பயிற்சிக்கூடத்தின் சாத்தியங்களைப் பொறுத்துத் தமக்கான மருத்துவநிலையத்தையும், மருத்துவர் அல்லது சுகாதார உத்தியோகத்தரையும் கொண்டிருக்க வேண்டும்.

சூட்டுப் பயிற்சி - புதிய போராளிகளுக்கான பயிற்சிக்கூடத்தின் பிரதான பாடமாகும். கெரில்லா நன்றாகச் சுடத்தெரிந்தவனாக இருக்க வேண்டும். இதன்போது, அவன் குறைந்தளவு வெடிபொருட்களையே செலவழிக்கவும் வேண்டும். சூட்டுப்பயிற்சிக் கல்வி சுடுகலன்களின் குறிபொருத்தல் பயிற்சியுடன் ஆரம்பமாகின்றது. இதற்காகச் சாதாரணமான நான்கு தடிகளைக்கொண்ட கருவியொன்று பயன்படுத்தப்படுகின்றது.

இதனுள் அசையாதவாறு சுரிசுடுகலன் பொருத்தப்படுகின்றது. இந்தக் கருவி அசையாத இலக்குத் திரைக்குச் சில மீற்றர்கள் தொலைவில் பொருத்தப்படுகின்றது. திரைக்கருகில் இன்னொரு புதிய போராளி நிறுத்தப்படுவான். அவன் தனது கையில் இலக்கைப் பிடித்திருப்பான்.

தொடர்வான்...

நெற்றிப்பொறியன்

# தமிழ் இந்து மக்களின் மத உரிமைகளை இலங்கை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்



தமிழ் இந்து மக்களின் மிக முக்கிய பண்டிகைகளில் ஒன்றான கார்த்திகைத்தீப விளக்கீட்டினை இராணுவமும் பொலிசும் இணைந்து குழப்பியதற்கு எதிராகவும் அரசாங்கம் இது குறித்து எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ளாததைக் கண்டித்தும் தமிழ்த்தேசியக் கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி, தமிழர் சுயாட்சிக் கழகம், தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் ஆகிய கட்சிகளின் சார்பில் மாவை சோ. சேனாதிராஜா கையெழுத்திட்டு அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளார்.

**தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டு அறிக்கையின் முழுவிபரம் வருமாறு :**

தமிழ் மக்கள் இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள். அவர்களுக்கு மிகவும் தொன்மையான மொழி, மத, கலாசார பண்பாடுகள் உண்டு. பாரம்பரியமாகவே மத அனுஷ்டானங்களையும், கலாசார பண்பாடுகளையும் மிக இறுக்கமாகப் பின்பற்றிவரும் ஒரு இனமாகவே தமிழ்த் தேசிய இனம் இலங்கை மண்ணில் வாழ்ந்து வருகின்றது. அவர்களது கலாசாரப் பண்பாடுகளைப் பற்றிப் பிடிப்பதற்காகவும் அவற்றை யாரும் அழித்துவிடக்கூடாது என்பதற்காகவும் தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்தும் போராடி வருகின்றது. அவற்றைத் தட்டிப்பறிக்க முனைபவர்களுக்கு எதிராக விட்டுக்கொடுப்பின்றித் தொடர்ந்தும் போராடி வருகின்றார்கள்.

தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளுக்காகப் போராடி மரணித்துப்போனவர்களைத் தமிழ் மக்கள் அஞ்சலிக்கக்கூடாது என்பதற்காக, அரசாங்கம் பொய்யான தவறான வழிகாட்டுதல்களை நீதிமன்றங்களுக்கு வழங்கி, தமக்காக மரணித்துப் போனவர்களுக்கு அஞ்சலிப்பதற்குத் தடையினைப் பெற்றிருந்தார்கள். அதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற தமிழ் இந்து மக்களின் பாரம்பரிய மத அனுஷ்டானமான கார்த்திகை விளக்கீட்டினை இராணுவமும் பொலிசாரும் இணைந்து பல இடங்களில் மிக அநாகரிகமான முறையில், அந்த மக்களின் மத நம்பிக்கைகளையும் கடவுள் நம்பிக்கையையும் அவமதிக்கும் வகையில் அதனை தடுத்து, அச்சுறுத்தி அவர்களை அடக்க முயற்சித்தார்கள்.

.லங்கையில் .ருக்கக்கூடிய மக்கள், தாம்தாம் விரும்பிய மதங்களைப் பின்பற்றுவதற்கும், அதனை அனுஷ்டிப்பதற்கும் கடைப்பிடிப்பதற்கும் அரசியல் சாசன ரீதியான சகல உரித்தும் உடையவர்கள். ஆனால் கடந்த 29ஆம் திகதி இந்து மக்களின் கார்த்திகை விளக்கீட்டின்பொழுது புதுக்குடியிருப்பு, பரந்தன், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணத்தின் வடமராட்சி, வலிகாமம் போன்ற பல பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிசாரும் வீடுகளுக்குள் சென்றும், இந்து ஆலயங்களுக்குள் அத்துமீறி நுழைந்தும், அவர்கள் பக்தியோடு ஏற்றிய தீபங்களை சப்பாத்துக் கால்களால் எட்டி உதைத்து அவர்களது அனுஷ்டானங்களை அவமதித்ததுடன், சில பெரியோர்கள் தாக்கப்பட்டும் இருக்கின்றார்கள். கோவில் அர்ச்சகர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கின்றார்கள். கார்த் திகைத் தீபமேற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் கைது செய்யப்பட்டு அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்து மக்களின் மிக முக்கிய மத அனுஷ்டானமான கார்த்திகை விளக்கீட்டினை இலங்கை அரசின் பொலிசாரும் இராணுவத்தினரும் திட்டமிட்ட வகையில் ஆயுத முனையில் குழப்பியிருக்கிறார்கள். கார்த்திகை விளக்கீடு என்பது இந்து மக்களின் மிக முக்கியமான அனுஷ்டான நாள் என்பதும், காலாதிகாலமாக அதனை அவர்கள் அனுஷ்டித்து வருகிறார்கள் என்பதும், இலங்கை அரசுக்கும் பொலிசாருக்கும் படையினருக்கும் தெரிந்த விடயம். உண்மைநிலை அப்படியிருக்க, அதனை அச்சுறுத்தித் தடைசெய்ய முயற்சிப்பது என்பது தமிழ் மக்களின் மத வழிபாட்டுரிமையைப் பறித்தெடுப்பதாகும்.

அரசாங்கத்தின் திட்டமிட்ட இந்த செயற்பாடானது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. தம்மை ஒரு ஜனநாயக அரசு எனக் கூறிக்கொள்ளக்கூடியவர்கள் இன்னுமோர் தேசிய இனத்தின் மத உரிமையை அச்சுறுத்திப் பறிப்பதென்பதும்தடைசெய்வதென்பதும் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத ஒன் றாகும்.

படையினரதும், பொலிசாரினதும் இந்த திட்டமிட்ட செயற்பாட்டிற்கு அரசாங்கம் மன்னிப்புக் கோரவேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறாது என்னும் உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். அரசாங்கம் தமிழ் மக்களுடைய மொழி, மத, நில உரிமைகளைத் தொடர்ச்சியாகப் புறக்கணிக்குமாக இருந்தால், தமிழ் மக்களைத்தொடர்ச்சியானஒரு அறவழிப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசாங்கமே வழிசமைக்கிறது என்று பொருள்படும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் .க்கோரிக்கைகளுக்கு இசைவாக அரசாங்கம் உடனடியாக தனது மன்னிப்பைக் கோர வேண்டும் என்றும் அல்லது குறைந்தபட்சம் நடந்து முடிந்த சம்பவங்களுக்குத் தனது வருத்தத்தையாவது தெரிவிக்க வேண்டும் என்றும் அரசியல் சாசனத்தில் வழங்கப்பட்டுள்ள மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமை மற்றும் வழிபாட்டுரிமைக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

# பூகோள அரசுகளால் இலங்கைக்கு ஆபத்து.
## சீனா, அமெரிக்கா, இந்தியா கடும் போக்கைக் கடைப்பிடிக்கின்றன

இன்றைய அரசியல் சூழ்நிலையில் என்றும் இல்லாதவாறு பூகோள அரசியலில் அழுத்தங்கள் இலங்கைக்குள் பாரிய செல்வாக்கை செலுத்துகின்றன. கடல் சார்ந்த பிரதேசங்கள் அல்லது அதனுடைய வளங்கள் குறித்த நாடுகளினால் சூறையாடப்பட்டு வருகின்றது என்பதை அவதானிக்க முடிகிறது. ஒரு இராஜதந்திர போர் முறைக்கு அல்லது அதன் வெளிப்பாடுகளுக்கு இலங்கை நாடு கேந்திர முக்கியத்துவம் பெற்ற நாடாக அமையப்பெற்றுள்ளது. இரண்டாம் உலகப்போரில் கொல்லப்பட்ட சமாதிகள் இன்னமும் திருகோணமலையில் இருக்கின்றன. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இந்த நாடு சிங்களவர்களிடம் பிரிட்டிஸ் அரசாங்கத்தினால் கையளிக்கப்பட்டது.

அக்காலகட்டத்திலிருந்து இன்றுவரை தமிழ் சிறுபான்மையின மக்களுக்கான தீர்வு இன்னும் கிடைத்தபாடில்லை. இதற்கு முக்கிய காரணங்களாக பூகோள அரசியலே முக்கிய இடம் பிடிக்கிறது. பூகோள அரசியல் அல்லது அதன் தாக்கம் என்பது எவ்வாறெனில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை அபிவிருத்தி அடையவிடாது தனது தன்னாட்டு பொருளாதாரத்தை அந்த நாட்டுக்குள் திணித்து குறித்த நாட்டை கடன் சுமையாக்கி தனது சர்வதிகாரத்தை பாவிப்பதே இதுவொரு வகை. இன்னுமொரு வகையில் குறித்த நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தி புலனாய்வு கட்டமைப்பை ஏற்படுத்தி அதனுடன் ஆசிய பிராந்தியத்தில் வரக்கூடிய போர் வேகம் கொண்ட பிரச்சனைகளை சுபீட்சமாக கையாளுவதற்கும் சர்வதிகாரம் கொண்ட நாடுகளை அல்லது ஏனைய நாடுகளை தனது பிடிக்குள் கொண்டுவருவதற்குமான நடவடிக்கைகளாகவே இந்த பூகோள அரசியல் செயற்படுகிறது. ஏனைய நாடுகளின் தலையீடுகள் இலங்கையில் இருப்பது அரிது. குறிப்பாக சீனா, அமெரிக்கா, இந்தியா மட்டுமே மிகமுக்கியமாக இலங்கையில் ஒரு தளமிட்டு இருப்பதற்கு அன்றிலிருந்து இன்று வரை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஏட்டிக்கு போட்டியான அபிவிருத்தி யுத்தத்தை நிறைவு செய்தவர் நீயா? நானா? என்ற போட்டி குறிப்பாக இந்தியர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போரினை முடிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. காரணம் ரஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டமையே.

இதனை தவிர திருகோணமலை கொழும்பு துறைமுகம் யாழ்ப்பாணம் இந்த மூன்று பகுதிகளையும் தனது ஆதிக்கத்திற்குள் வைத்திருக்க வேண்டும். குறிப்பாக அவ்வாறு வைத்திருப்பதன் பிரதான நோக்கம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சர்வதேச ரீதியாக போர் இடம்பெற்றால் அதனை எதிர்கொள்வதற்கு கடல் ரீதியாக இலங்கையின் திருகோணமலை துறைமுகம் முக்கியத்துவம் வாய்ந்தது. திருகோணமலை துறைமுகத்தின் விசேட தன்மை என்னவென்றால் கடலை சுற்றி மலை காணப்படுவதனால் பாரிய அளவிலான போர் கப்பல்கள், வணிக கப்பல்களை ஒரே நேரத்தில் பாதுகாப்பாக நிறுத்திக்கொள்ள முடியும். அங்கிருந்து தாக்குதல்களை தொடுப்பதற்கும் இலகுவான இயற்கை காப்பரண்கள் உருவாக்கப்பட்டிருப்பதே. இதனுடைய விசேட தன்மையை அறிந்துகொண்ட அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் கொழும்பு, அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளும் தமக்கு தேவையென கூறிக்கொண்டு தற்பொழுது கொழும்பு, அம்பாந்தோட்டை பகுதிகளை சீன அரசு தன்வசப்படுத்தியிருக்கிறது. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா இலங்கை மீது போர் குற்ற விசாரணைகளை தொடுக்க வேண்டும் என்ற தோரணையில் அடுத்தகட்ட காய்நகர்த்தல்களை நகர்த்தி வருகிறது. இதற்கு ஆதரவாக முன்னாள் அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா பின்னணியில் செயற்பட்டு வருகிறார்கள். தமிழீழ



விடுதலைப்புலிகளின் போராட்டமானது பயங்கரவாத போராட்டமென சர்வதேச ரீதியாக சித்தரித்துக்கொண்டிருக்கின்ற இலங்கை அரசாங்கமானது குறித்த நாடுகளினால் தமக்கு ஆபத்து இல்லையென்ற மமதையில் செயற்பட்டுவருகிறார்கள். மேற்குறிப்பிட்ட நாடுகள் தமக்கான சாதகமான முடிவுகள் எட்டப்படாவிட்டால் இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகித்து தமது சர்வதிகார போக்கினை கடைப்பிடிப்பதற்கு அதுவொரு இலகுவான வழியாக அவர்களுக்கு அமையும்.

ஆகவே தான் தமிழீழ விடுதலைப்புலிகளை தொடர்ந்தும் இலங்கை அரசானது பயங்கரவாதிகள் என சித்தரித்துகொண்டிருக்கிறது. இவர்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். விடுதலைப்புலிகளுடைய பயங்கரவாத தடைச்சட்டத்தை இந்த நாடு நீக்குமாக இருந்தால் பூகோள ரீதியான அழுத்தங்களில் இருந்து இலங்கை அரசு விடுபடும். தமிழீழ விடுதலைப்புலிகள் வலுவாக இருந்த காலகட்டத்தில் இலங்கை பரப்புக்குள் எந்த நாட்டு கப்பல்களும் வந்து போவதற்கு அனுமதியற்ற ஒரு சூழல் உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது எந்த நாட்டு கப்பல்களும் சுயாதீனமாக வந்து போகலாம் என்ற நிலைமையே உருவாக்கப்பட்டுள்ளது. போருக்குபின்னரான காலப்பகுதிகளில் இலங்கை அரசானது கடன் சுமை மீள முடியாத கடன் சுமையாக மாற்றம் பெற்றுள்ளது. போரை காரணம் காட்டி தமது சர்வதிகாரத்தை பயன்படுத்திக்கொண்ட குறித்த நாடுகள் தொடர்ந்தும் இலங்கை அரசின் மீது அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் இல்லையென இலங்கை அரசு அறிவிக்குமாக இருந்தால் சீனா, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டி நேரிடும்.

இந்த நாட்டில் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் உருவாக்கப்படக்கூடாது என குறித்த நாடுகள் எதிர்மறையாக செயற்பட்டன. தங்களாலான அனைத்து உதவிகளையும் இலங்கை அரசுக்கு வழங்கின. குறிப்பாக ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் முடிவிற்கு கொண்டுவர வேண்டும் என்ற தோரணையில் களமிறங்கிய மேற்குறிப்பிட்ட மூன்று நாடுகளும் பூரண ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்கியிருந்தன. மல்டி பெரல் எனும் விசவாயு போன்ற இரசாயன ஆயுதங்களை சீன அரசாங்கமும் சட்லைட் உதவியுடனான விமான தாக்குதல்களை இந்தியாவும் விடுதலைப்புலிகளின் கப்பல்களை கடலில் தாக்கி அழிக்கின்ற நடவடிக்கைகளுக்கு உதவியாக அமெரிக்காவும் செயற்பட்டிருந்தது. ஒரு நாட்டில் போர் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றபொழுது மிகவும் ஊன்று சக்தியாக கடல் மார்க்கமான வழங்கல்கள் சரிவர செயற்படுத்தப்பட வேண்டும். அந்த வழங்கல்கள் முறியடிக்கப்படுமாக இருந்தால் நீண்ட நாட்கள் எதிரிகளுடன் போரிட முடியாது. ஆகவே குறித்த அணியினரை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தி முறியடிக்க முடியும் என்பதே கடல் மார்க்கமான வழங்கலை கட்டுப்படுத்துவதன் நோக்கம். இதனை அமெரிக்கா சரிவர செய்தது. முன்னேறி தாக்குதல்களை நடத்துகின்ற படையினரை கொல்லும் வகையிலும் அப்பிரதேச மக்களை கொல்லும் வகையிலும் உடல் முழுவதும் எரிகணை இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி இந்த நகர்வுகளை கட்டுப்படுத்துவதற்கு சீனா உதவியது. ஆகாய மார்க்கமான தாக்குதலுக்கு இந்திய அரசு மிக கட்சிதமாக செயற்பட்டது. இவ்வாறெல்லாம் இவர்கள் செயற்பட காரணம் இந்த இலங்கை திருநாட்டில் தமது படைகளையும் தமது அரசியல் நடவடிக்கைகளையும் நிலைநிறுத்துவதேயாகும். இந்த பூகோள அரசியல் பிடிக்குள் இருந்து இலங்கை அரசு எப்பொழுது மீளப்போகிறது. இந்த பூகோள குழிக்குள் இருந்து இலங்கை அரசு வெளிவரும்வரையிலும் தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் சாத்தியப்படப்போவதில்லை.

தற்பொழுது யுத்தம் முடிவடைந்து 11 ஆண்டுகளை கடந்துள்ள நிலையில் மீளவும் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கும் செயற்பாடாகவே இந்த அரசாங்கம் செயற்பட்டுவருகின்றது. நாடுகளை சுரண்டிப்பார்த்து அதில் குளிர் காய்கின்ற நடவடிக்கைகளையே கட்சிதமாக இந்த மூன்று நாடுகளும் செய்துவருகிறார்கள். இந்தியா எதனை நினைக்கிறதோ அதனையே இலங்கையில் செய்துவிட தற்பொழுது கட்டமைப்பை பயன்படுத்துகிறது. அல்லது ஏனைய கட்சிகளை பயன்படுத்துகிறது. முரண்பாடான கருத்துக்களை முன்வைத்து தமிழினத்தை கூறுபோடுகின்ற நிலைக்கு குறித்த பூகோள அரசியல் நாடுகள் செயற்படுகின்றார்கள். அரசியல் நீரோட்டத்தில் சர்வதேச நாடுகளில் பாரிய மாற்றங்கள் ஏற்படுகின்றது.

தற்பொழுது கொரோனா வைரஸ் என்ற இரசாயன தாக்குதலை சீன அரசாங்கம் வெற்றிகரமாக பரிசோதித்து முடித்துள்ளது. அதில் வெற்றியும் கண்டுள்ளது. சீன அரசாங்கத்திற்கு பல நாடுகளும் தற்பொழுது அடிபணிந்தவர்களாக செயற்படும் விதத்தை அவதானிக்க முடிகிறது. இனி உலக நாடுகளில் ஒரு போர் ஆரம்பிக்கப்படுமாக இருந்தால் அது தொழினுட்ப ரீதியிலான தாக்குதல்களே இடம்பெறும். குறித்த நாடுகளை அணுகுண்டு போட்டுதான் அழிக்க வேண்டும் என்ற தேவை அரசாங்கங்களுக்கு இருக்காது. இவ்வாறான கண்டுபிடிப்புக்களை கண்டுபிடிக்கும் பொழுது அவ்வாறே ஏனைய நாடுகளும் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளும்.

ஆகவே இலங்கையானது சர்வதேச நாடுகளில் முதன்மை தங்கிய நாடாக மாற்றம் பெறவேண்டுமாக இருந்தால் தமிழ் மக்களுடன் இணைந்து அவர்களுக்கான தீர்வு திட்டங்களை முன்னெடுத்து செல்வதன் ஊடாக சர்வதேச தமிழ் அறிஞர்கள் புத்திஜீவிகள் இலங்கையில் முதலீடுகளை ஏற்படுத்தி தொழிற்சாலைகளை ஆரம்பித்து கட்டுமான வசதிகளை ஏற்படுத்தி சிறந்ததொரு நாடாக கட்டியெழுப்ப முடியும். இலங்கை அரசை பிழையான வழியில் குறித்த நாடுகள் வழிநடத்துகின்றன. இன்னமும் இவர்கள் புரியாதவர்களைப்போன்று நடக்கிறார்கள்.

போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என கூறிய மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் கூட பூகோள அரசின் குழிக்குள் இருந்து வெளியில் வரமுடியாது இருந்தது. மாறி மாறி வருகின்ற அரசாங்கங்களும் பூகோள அரசியலுக்குள் சிக்கித்தவிக்கின்றன. தமிழினம் பயங்கரவாதிகள் அவர்களை முற்றாக அழிக்க வேண்டும் என்று செயற்பட்டு வந்த இலங்கை அரசு இந்த நாடு சர்வதேச நாடுகளின் பிடிக்குள் இருக்கின்றது என்பதை சற்றும் உணராமல் செயற்படுகின்றார்கள். உலக வல்லரசுகள் எல்லாம் ஏனைய நாடுகளில் குழப்பங்களை உருவாக்கி அதனுடன் தமது அரசியலையும் வியாபாரத்தையும் நடத்திவருகிறார்களே தவிர குறித்த நாட்டுக்குள் சமாதானம் வந்துவிடக்கூடாது என மிகத்தீவிரமாக செயற்படுகிறார்கள். சிதறிப்போன இஸ்ரேல் ஒன்றிணைந்தது போன்று தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நாடு உருவாக்கப்படும். தமிழினத்தின் மீது விடுக்கப்படுகின்ற வன்முறைகள் இன ரீதியிலான சுத்திகரிப்புகள் ஒவ்வொன்றும் இந்த நாடுகளின் பாரிய தாக்கத்தை உருவாக்கும். அவ்வாறான தாக்கங்கள் உருவாக்கப்படும் போது தமிழீழம் என்ற ஒன்று மலரும் என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை.

நெற்றிபொறியன்

# திருகோணமலை திருமங்கலாய் காட்டுப்பகுதியில் அழிவடைந்து கொண்டிருக்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன் ஆலயம்

இலங்கையில் இந்து மதத்திற்கு 2500 ஆண்டுகளுக்கு குறையாத வரலாறு உண்டு. பௌத்த மதத்தை முன்னிலைப்படுத்தி எழுந்த பாளி இலக்கியங்கள் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் அறிமுகமாவதற்கு முன்னரே இலங்கையில் இந்து மதமும். அம்மதம் சார்ந்த ஆலயங்களும் இருந்ததாகக் கூறுகின்றன. அவற்றுள் கிழக்கிலங்கையில் இருந்த இற்றைக்கு 1600 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூன்று சிவன் ஆலயங்கள் பற்றி மகாவம்சம் கூறுகின்றது. சமகால இலங்கையில் அதிலும் குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான இந்து ஆலயங்கள் புதுப் பொலிவுடன் காணப்படுகின்றன. அவற்றுள் கணிசமான ஆலயங்கள் ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் சுதேச மக்களுக்கு மத சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னர் பழைய ஆலயங்கள் இருந்த இடங்களில் அல்லது பழைய ஆலயங்களின் பெயரை நினைவுபடுத்தி புதிய இடங்களில் கட்டப்பட்டவையாக உள்ளன. போத்துக்கேயர் ஆட்சிக்கு முன்னர் இம்மாகாணங்களில் இருந்த ஆலயங்கள் பற்றி இலக்கியங்கள். புராணங்கள். கல்வெட்டுகள். ஐரோப்பியர்கால ஆவணங்கள் என்பவற்றில் பல வரலாற்றுக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆயினும் தற்காலத்தில் அவ்வாலயங்கள் இருந்த ஒரு சில இடங்களில் மட்டும் அவ்வாலயங்களின் அழிபாடுகளை அடையாளம் காண முடிகின்றது. ஆயினும் அவ்வழிபாடுகளை வைத்து அவ்வாலயங்களின் கட்டிட அமைப்பையோ. கலைமரபையோ. வழிபாட்டிலிருந்த தெய்வங்கள் பற்றியோ அறியமுடியவில்லை.

இதற்கு இம்மாகாணங்களின் கரையோரங்களில் ஆதிக்கம் செலுத்திய போத்துக்கேயரும். பின்வந்த ஒல்லாந்தரும் சுதேச மதங்களுக்கு எதிராகக் கடைப்பிடித்த கலையழிவுக் கொள்கையால் இவ்வாலயங்கள் அழிக்கப்பட்டதே காரணமாகும். அவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களின் கட்டிடப் பாகங்களைக் கொண்டே அவர்களின் ஆட்சிக்காலக் கோட்டைகள்., கிறிஸ்தவ ஆலயங்கள். நிர்வாகக் கட்டிடங்கள் என்பன கட்டப்பட்டன. இந்த உண்மையை அவர்களின் ஆட்சி ஆவணங்களே உறுதி செய்கின்றன. இதை தற்போது யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வில் கிடைத்து வரும் இந்து ஆலயங்களுக்குரிய கட்டிடப் பாகங்கள் மேலும் உறுதிசெய்கின்றன. இருந்த போதிலும் போத்துக்கேயர். ஒல்லாந்தர் ஆட்சியில் அவர்களின் ஆதிக்கம் பெரும்பாலும் இலங்கையின் கரையோரப் பகுதிகளை அண்டிய மாகாணங்களில் ஏற்பட்டிருந்ததனால் அவர்களின் கலையழிவுக் கொள்கையில் இருந்து மாகாணங்களின் உட்பகுதியில் இருந்த ஆலயங்கள் தப்பித்திருக்க இடமுண்டு. அவற்றில் ஒன்றாகவே திருமங்கலாய்ச் சிவன் ஆலயத்தைப் பார்க்கின்றேன்.

இவ்வாலயம் திருகோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டி பிரதேச சபைக்குட்பட்ட திருமங்கலாய் என்ற வரலாற்றுப் பழமைவாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயம் பற்றி திருகோணமலை தலபுராணங்களில் ஒன்றான திருகரைசை புராணத்திலும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் தற்போது இவ்வாலயம் கிளிவெட்டியின் பிரதான வீதியில் இருந்து ஏறத்தாழ பத்து கிலோ மீற்றர் தொலைவில் மீன்சார வேலி போடப்பட்ட அடர்ந்த காட்டின் மத்தியில் காணப்படுகின்றது. இவ்விடத்திற்குச் செல்லும் பாதையில் பிற்பகல் மூன்று மணிக்குப் பின்னர் யானைகளின் நடமாட்டத்தை எதிர்கொள்வது சாதாரண நிகழ்வாகவே இருக்கின்றது. இவற்றின் காரணமாகவே இதுவரை தொல்லியல் வரலாற்று ஆய்வாளர்கள் இவ்வாலயத்தை நேரில் சென்று ஆய்வு செய்வதில் தயக்கம் காட்டி வந்துள்ளனர் எனலாம். இந்நிலையில் திருமங்கலாய் பிரதேசத்தில் வாழ்ந்த மூதாதையினரின் வழித்தோன்றல்களாக தற்போது கிளிவெட்டியில் வாழ்ந்து வரும் திரு. வி.முத்துலிங்கம், திரு.கே.குரேந்திரராசா திரு.கே.மாணிக்கராசா முதலியோர் இவ்வாலயத்தை ஆய்வு செய்வதற்கு எமக்கு வழங்கிய பாதுகாப்பு உத்தரவாதமும். உதவிகளும் அவ்வாலயத்தை நேரில் சென்று ஆய்வு செய்வதற்கு தூண்டுதலாக அமைந்தது.

இந்த ஆய்வில் எமது பல்கலைக்கழக தொல்லியல் இறுதிவருட மாணவர்களுடன் மத்திய கலாசார நிதிய யாழ்ப்பாண செயல்திட்ட முகாமையாளர் திரு. லக்ஷ்மன் சந்தன மைத்திரிபால மற்றும் யாழ்ப்பாண பிராந்திய தொல்லியற் திணைக்களக அதிகாரிகளான திரு.மணிமாறன். திரு.கபிலன் ஆகியோர் பல சிரமங்களுக்கு மத்தியில் எம்முடன் இணைந்து பல நாட்களாக ஆய்வில் பங்கெடுத்தமை மாணவர்களுக்குப் புதிய ஆய்வு அனுபவத்தைக் கொடுத்தது.

தற்போது இவ்வாலயத்தின் பெரும்பகுதி முற்றாக அழிவடைந்து அதன் அழிபாடுகள் ஆங்காங்கே கற்குவியல்களாகக் காணப்படுகின்றன. ஆயினும் அவ்வாலயத்தின் கட்டிட அமைப்பையும். அதன் கலை மரபையும். ஆலயம் தோன்றி வளர்ந்த காலத்தையும் உறுதிப்படுத்தக் கூடிய நம்பகரமான ஆதாரங்களை அடையாளம் காணக்கூடியதாக இருக்கின்றது.. கருங்கற்களையும். செங்கட்டிகளையும் கொண்டு கட்டப்பட்ட இவ்வாலயத்தின் கர்பக்கிரகமும் அதன் மேலமைந்த விமானமும் முற்றாக அழிவடைந்து அதன் கட்டிடப் பாகங்கள் ஆங்காங்கே சிதறுண்டு காணப்படுகின்றன. கர்பக்கிரகம் இருந்த இடம் பிற்காலத்தில் புதையல் எடுப்போரால் தோண்டப்பட்டு அவ்விடம் தற்போது ஒரு குழியாகக் காணப்படுகின்றது. கர்பக்கிரகத்திற்கு முன்னால் அழிவடைந்து காணப்படும் அந்தராளத்தில் ஆலய காலப் பொருட்கள் சிலவற்றுடன் பிற்காலத்தில் கொண்டுவந்து வைக்கப்பட்ட சிவலிங்கமும் காணப்படுகின்றது. அந்தராளத்திற்கு முன்னால் மகாமண்டபமும். பலிபீடமும் இருந்தற்கான அத்திவாரங்களும். அதற்குப் பயன்படுத்தப்பட்ட அலங்காரத் தன்மை கொண்ட பல கருங்கற் தூண்களும் காணப்படுகின்றன. இம்மகாமண்டத்திற்கு வலப்பக்கமாக பயன்படுத்தப்படாத நிலையில் கருங்கற்களான மாடங்கள். தெய்வச் சிலைகள் வைப்பதற்குப் பயன்படுத்திய பீடங்கள் மற்றும் புடைப்புச் சிற்பங்களும்





காணப்படுகின்றன. மகாமண்டபத்தின் இடப்பக்கமாக ஆலயத்தில்பயன்படுத்தியிருந்த கோமுகிகள். சந்தனம் அரைக்கும் கற்கள். கபோதவடிவிலமைந்தஅரைவட்டத்தூண்கள் காணப்படுகின்றன. மகாமண்டபத்திற்கு மிக அருகில் கருங்கற்களைக் கொண்டு சற்சதுர வடிவில் ஆழமாகக் கட்டப்பட்ட ஆலயத்தின் தீர்த்தக் கிணறு காணப்படுகிறது. மேலும் இவ்வாலயத்தைச் சுற்றி சுற்று மதில்களும் அவற்றிடையே துணைக் கோவில்களும் (பரிவாரத் தெய்வங்கள்) இருந்திருக்கலாம் என்பதை அவற்றிற்குரிய அத்திவாரங்களும். பரவலாகக் காணப்படும் செங்கட்டிகளும். கருங்கற்களும் உறுதிப்படுத்துகின்றன.

இந்த ஆய்வின் போது கட்டிட அழிபாடுகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஐந்து தமிழ்க் கல்வெட்டுக்கள் இவ்வாலய வரலாற்றுடன். கிழக்கிலங்கை வரலாறு பற்றிய ஆய்விலும் அதிக முக்கியத்துவம் வாய்ததாகக் காணப்படுகின்றது. எமக்குத் தெரிந்தவரை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள வரலாற்றுப் பழமைவாய்ந்த ஆலயங்களுடன் அவ்வாலயங்களின் வரலாறு கூறும் கல்வெட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் அந்த இரண்டு அம்சங்களும் முதன் முறையாகத் திருமங்கலாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களின் எழுத்தமைதியைக் கொண்டு அவை வேறுபட்ட காலங்களில். வேறுபட்ட நோக்கங்களுக்காக பொறிக்கப்பட்டவை என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது.

அவற்றுள் கி.பி. 10 ஆம். கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்குரிய மூன்று கல்வெட்டுக்கள் ஆலய நிர்வாக ஒழுங்குகள் பற்றியும். அவ்வாலயத்திற்கு சிற்றம்பலம் உடைய-ார். திருவெண்ணைக்கூற்றன். திருவரங்கம் முதலான அதிகாரிகள். சமூகப் பெரியவர்கள் வழங்கிய தானங்கள் (காசு) பற்றியும் கூறுகின்றன. கி.பி.15 ஆம் கி.பி.16 ஆம் நூற்றாண்டுக்குரிய ஏனைய இரு கல்வெட்டுக்களும் இவ்வாலயத்திற்கு பசுக்கள் தானமாக வழங்கப்பட்ட செய்திகளைக் கூறுகின்றன. இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கங்குவேலி என்ற இடத்தில் திருமங்கலாய் ஆலயத்திற்குரிய மணி ஒன்று காணப்படுகின்றது. இது திருமங்கலாய் ஆலயத்தில் இருந்து பிற்காலத்தில் கங்குவேலிக்கு எடுத்துச் செல்லப்பட்ட மணியாகும். அவ்வாலய மணியில் திருமங்கலாய் கோவிலுக்கு அவ்வூரில் வசித்த (திருமங்கலாயில் வசித்த) "பத்திபெட்டி மகன் பத்தன் யுடைய உபையம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்தின் எழுத்தமைதி கொண்டு இதன் காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டிற்கு உரியதெனக் கூறலாம். ஆகவே மேற்கூறப்பட்ட கல்வெட்டுகள். ஆலய மணிச் சாசனம் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு இவ்வாலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஏறத்தாழ 17 ஆம் நூற்றாண்டுவரை அழிவடையாத நிலையில் இப்பிரதேச மக்களால் வழிபடப்பட்டு வந்துள்ளமை தெரியவருகின்றது. இவ்வாலயம் இலங்கைத் தமிழர் குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாறு.பண்பாடு பற்றிய ஆய்வில் பின்வரும் அம்சங்களில் முக்கியத்துவம் பெறுகின்றதை அவதானிக்க முடிகின்றது:

1.இவ்வாலயம் கி.பி.10ஆம் நூற்றாண்டிலிருந்து திராவிடக் கட்டிடக்கலை மரபில் தோன்றி வளர்ந்ததற்குப் பின்புலமாக திருமங்கலாய்ப் பிரதேசத்தின் தொன்மையான. செறிவான தமிழ்க் குடியிருப்புக்கள் இருந்துள்ளமை தெரிகின்றது. இந்த உண்மையை எமது ஆய்வின் போது இப்பிரதேசத்தில் ஆங்காங்கே பிற தேவைகளுக்காக வெட்டப்பட்டிருந்த ஆழமான குழிகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட 10ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட மட்பாண்ட ஓடுகள். கூரை ஓடுகள். சுடுமண் உருவங்கள் முதலான சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

2.தமிழகத்தில் பல்லவர் ஆட்சியில் தோன்றிய பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் சமகால இலங்கையிலும் கற்களைப் பயன்படுத்தி திராவிடக் கலைமரபில் ஆலயங்கள் அமைக்கும் மரபு தோன்றி வளர்ந்ததைக் காணமுடிகின்றது. அவற்றுள் சோழ ஆட்சியின் தலைநகராக இருந்த பொலநறுவையில் கட்டப்பட்ட இரண்டாம் சிவதேவாலயமே இலங்கையில் இதுவரை ஓரளவு முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய திராவிடக் கலைமரபில் கட்டப்பட்ட ஆலயம் எனக் கூறப்படுகின்றது. ஆனால் பொலநறுவை இராசதானி கால வரலாற்றில் எந்த இடத்திலும் சொல்லப்படாத திருமங்கலாய் சிவன் ஆலயம் அதன் கட்டிட அமைப்பிலும். கலைமரபிலும் சற்று மேலோங்கிக் காணப்படுவதன் முக்கியத்துவம் எதிர்காலத்தில் விரிவாக ஆராயபட வேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

3.சோழர் ஆட்சியிலும் சோழர் ஆட்சிக்குப் பின்னரும் பொலநறுவைக்கு அப்பால் வடக்கு - கிழக்கு இலங்கையிலேயே சோழ ஆட்சியாளர். தமிழ் அதிகாரிகள். தமிழ் வணிக கணங்கள் முதலியோரால் கட்டப்பட்ட ஆலயங்கள் பற்றிப் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. ஆயினும் அக்கல்வெட்டுக்கள் கூறும் ஆலயங்கள் எந்த இடங்களில் இருந்துள்ளன என்பது பெரும்பாலும் இதுவரை அடையாளம் காணப்படாமலே உள்ளன. ஆனால் திருமங்களாயில் ஆலயம் பற்றிய கல்வெட்டுக்களுடன். ஆலய அமைப்பையும். அதன் கலை மரபையும் அறியக்கூடிய அரிய பல ஆதாரங்கள் முதன் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள் கிழக்கிலங்கை இந்துக்களின் வரலாறு. பண்பாடு பற்றிய எதிர்கால ஆய்வுகளில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன.

4.இலங்கையில் அநுராதபுர இராசதானியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில பௌத்த ஆலயங்களே தற்காலத்திலும் வழிபாட்டிற்குரிய ஆலயங்களாகக் காணப்படுகின்றன.

11ஆம் பக்கம் பார்க்க...
சூழியோடி

# சேமமடு,செட்டிகுளம்,ஒதியமலை படுகொலையின் 36வது ஆண்டு நினைவு தினம்-சிவசக்தி ஆனந்தன்





சேமமடு.செட்டிகுளம்.ஒதியமலை படுகொலையின் 36வது ஆண்டு நினைவு தினம் தொடர்பாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் அவர்கள் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. 1984ம் ஆண்டு இலங்கை இராணுவம் சேமமடு.செட்டிகுளம்.ஒதியமலை ஆகிய மூன்று கிராமங்களிற்குள் அதிகாலையில் புகுந்து அப்பாவி தமிழ் பொது மக்களை கைது செய்தது மட்டுமன்றி சுட்டும் ,வெட்டியும் கொலை வெறித்தாக்குதலை நடாத்தியிருந்தனர். சேமமடு பகுதியில் 52பேரும் ஒதியமலை பகுதியில் 32பேரும் செட்டிகுளம் பகுதியில் 22பேரும் மொத்தமாக 106 பேர் படுகொலை செய்யப்பட்டனர் படுகொலை செய்யப்பட்ட அனைத்து மக்களும் வறிய விவசாய குடும்பங்களை சேர்ந்த குடும்பத் தலைவர்கள் மற்றும் இளைஞர்களுமாவர். இப்படுகொலை நினைவு நாள் ஆண்டு தோறும் முன்னெடுக்கப்பட்டு உயிர் நீத்த் ஆன்மாக்களுக்கான ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளில் உறவினர்களும். அப்பிரதேச வாசிகளும் ஈடுபட்டே வந்தனர்.




இந்நிலையில் இத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட அந்த அப்பாவி பொதுமக்களின் நினைவேந்தல் நாள் இன்றாகும் (02-12-2020) வழமைபோன்று உயிர் நீத்த உறவுகளின் நினைவாக வருடாந்த நினைவேந்தலை செய்வதற்கான ஏற்பாடுகள் அந்தந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.எனினும்.செட்டிகுளம் பகுதியில் பொலிஸார் திடீரென பிரசன்னமாகி நினைவேந்தலுக்கு தடை விதித்ததோடு. உயிர்நீத்த உறவுகளை நினைவேந்த அனுமதிக்க முடியாது என்று எச்சரித்துச் சென்றிருக்கின்றார்கள். கடந்தவாரம் உயிர் நீத்த போராளிகள் மற்றும் பொதுமக்களை நினைவு கூருவதற்கு வடக்கு கிழக்கிலே நீதி மன்றத்தினுடாக பொலிஸார் தடைத்தரவு பெற்றிருந்தனர். இதே போல் இக் கிராம மக்களும் உறவுகளும் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளுக்கு தங்களின் சமய காலாச்சார முறைப்படி செய்ய வேண்டிய கடமைகளை கூட செய்யமுடியாத துர்பார்க்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நாட்டிலே உண்மையான சமாதானம் நல்லிணக்கம் வரவேண்டுமாக இருந்தால் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கமைவாக உயிர்நீத்தவர்களுக்கான கடமைகளை செய்வதற்கு அனுமதி வழங்கியிருக்க வேண்டும். அதை விடுத்து இவற்றை செய்யாத வரை எந்த காலத்திலும் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்றாக இணைந்து ஒரே நாட்டுக்குள் வாழ முடியாது என்ற செய்தியை தான் இந்த அரசாங்கம் திரும்ப திரும்ப தமது நடவடிக்கைகள் மூலம் தெரியப்படுத்துகின்றது என்றார்.

# முஸ்லீங்களின் ஜெனாசாக்களை எரியுங்கள், புதைக்காதீர்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு அந்த மதத்தை இழிவுபடுத்தும் ஒரு செயல்

கொரோனா வைரஸினுடைய தாக்கம் காரணமாக இலங்கையிலும் கொல்லப்பட்ட மக்கள் அனைவரையும் எரிக்க வேண்டும் என்ற கட்டளையை உச்ச நீதிமன்றம் பிறப்பித்திருக்கிறது. முஸ்லீம் தரப்பும் இதற்கு எதிராக பல பிரயாச்சித்தங்களை மேற்கொண்டது. எம்.ஏ.சுமந்திரன் இவர்களுக்கு ஆதரவாக வாதாடினார். ஆனால் முஸ்லீம் உடலங்களை எரியுங்கள் என்றும் குறித்த உறவினர்களிடம் கையளிக்ககூடாது என்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது சுகாதாரம் கருதிய விடயமாக இருந்தாலும் நிலத்துக்கடியில் புதைப்பதனூடாக கொரோனா வைரஸ் தொற்ற முடியாது என்பது ஆராய்ச்சியாளர்களின் ஆய்வு. 3 அடி தூரத்தில் நின்று பேசினால் கொரோனா வைரஸ் தொற்றுவதற்கான வாய்ப்பு இல்லை என்றும் இது சமூக இடைவெளியை பேணுகின்ற நடவடிக்கை என்றும் கூறுகின்ற அரசாங்கம் 6 அடி உயரத்தினுள் ஒரு மனிதனை புதைப்பதனூடாக அந்த கொரோனா வைரஸ் எவ்வாறு ஒரு மனிதனை தாக்க முடியும்? என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். முஸ்லீம்கள் ஏன் தமது உடலங்களை புதைக்க வேண்டும் என்ற எண்ணத்தை கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றியும் அந்த மக்களின் தனித்துவமான உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். அவர்கள் உயிர்த்தெழுதலை நம்புகின்றவர்கள். ஈசா. நபி வருகின்றார்கள் என்ற நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் வரும் பொழுது அந்த உயிர்தெழுதலில் பங்கடைவோம் என்பது அவர்களின் நிச்சயம்.





ஆகவே தான் அந்த உடலங்களை புதைக்க வேண்டும் என்பதை சமய ரீதியாக அவர்கள் கூறுகின்றார்கள். இதற்கு முஸ்லீம் அரசியல் தலைவர்கள் குரல் கொடுத்தும் இறுதியில் எதுவும் கிடைக்கவில்லை. அரசாங்கம் தனது நிலைப்பாட்டிலிருந்தும் மாற்றம் பெறவில்லை. இவ்விவகாரம் தொடர்பில் மீள் பரிசோதனையை உச்ச நீதிமன்றம் மேற்கொண்டு சமய விழுமியங்களை பாதுகாக்கின்ற அந்த உணர்வுகளை மதிக்கத்தக்க வகையில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். முஸ்லீம்களை பொறுத்தவரையில் அல்லா மீது அதிக அன்பு கொண்டவர்கள். அல்லாவிற்காக தமது உயிரையும் மாய்ப்பதற்கு அவர்கள் தயங்க மாட்டார்கள். எதிர்வரும் காலங்களில் இதுவொரு வன்முறையாகவே இந்த நாட்டில் வெடிக்கலாம். இந்த நாட்டின் கௌரவ ஜனாதிபதி அவர்கள் இதற்காக ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

# தமிழ்க் கட்சிகள் இனவாத அரசாங்கத்தோடு சேர்ந்து பயணிப்பது முஸ்லிம் கட்சிகளுக்கு ஆபத்தானது



நீண்ட கால வரலாற்று யுத்தம் தமிழினத்துக்கு ஒரு படிப்பினையை விட்டுச்சென்றிருக்கிறது. தமிழினத்தின் விடிவிற்காக ஆரம்பக்கட்டத்தில் போராடிய இயக்கங்கள் குறிப்பாக ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.பி.டீ.பி, எல்.டிடி, ஈரோஸ் போன்ற இயக்கங்களை இந்திய அரசாங்கமே தனது பூகோள அரசியல் கருதி அவர்களை இணைத்துக்கொண்டது. அதனுடைய வெளிப்பாடு தமிழினம் என்றவொரு இலக்கை நோக்கி பயணித்தது. அக்காலகட்டத்தில் தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த என்.ஜி. இராமச்சந்திரன் (NGR) உதவிகளை வழங்கியிருந்தார்.

போராட்டங்களை இலங்கை இராணுவத்துடன் நடத்திவிட்டு இந்தியாவிற்கு விடுதலைப்புலிகள் செல்லுமளவிற்கு அதன் நற்புறவு காணப்பட்டது. அதன் பின்பு சுமூட்சமாக இந்திய பிரதமர் ரஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதன் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் பிளவுகள் ஏற்படுத்தப்பட்டது. இந்த பிளவுகளை ஏற்படுத்தியவர் அப்பொழுது ஆட்சியிலிருந்த ரணசிங்க பிரேமதாஸ அவர்கள். இதன் அடிப்படை காரணமே விடுதலைப்புலிகளின் இறுதிப்போராட்டம் பின்னடைவை சந்திக்க காரணமாக அமைந்தது. அதன் பின்னரான போராட்டங்கள் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

இக்காலகட்டத்தில் தமிழீழம் என்றதொன்று நிருவப்பட்டது. 58 கட்டமைப்புக்களை தமிழீழ விடுதலைப்புலிகள் கொண்டிருந்தன. இதில் நீதி நிர்வாகம் உட்பட கடல் வான் தரை என ஒரு நாடு கொண்டிருக்க கூடிய அனைத்து கட்டமைப்புக்களும் இவர்கள் கொண்டிருந்தமை விசேட அம்சமாகும். இவ்வாறிருக்கின்ற பொழுது வடகிழக்கின் ஓரிரு பிரதேசங்களில் நிலைகொண்டிருந்தஇராணுவதளங்கள் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் உக்கிர தாக்குதல்களை நடத்தி அவர்களின் ஆயுதங்களை கைப்பற்றி 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினரை கொன்றொழித்து வெற்றியை தமதாக்கினர்.

இக்காலகட்டத்தில் இந்தியாவிடனான நட்புறவை சிறிது தளர்த்திக்கொண்ட இலங்கை அரசு சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளுடனான தொடர்பை வைத்திருந்தது. அதன் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல்கள் தீவிரமடைந்தது. ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப், ஈபிடீபி போன்ற இயக்கங்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டார்கள். அதனுடைய இறுதி வடிவமே தமிழீழத்திற்கான கனவு சிதைக்கப்பட்டது எனலாம். மீண்டும் நாம் இந்த வரலாற்று தவறினை செய்யக்கூடாது.

இனிவருகின்ற அரசாங்கங்களும் கூட தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டத்தினை தரப்போவதில்லை. அடுத்து வருகின்ற தலைமுறையும் ஒரு அடிமை இனமாக வாழ்வதையே அரசாங்கம் விரும்புகிறது. அதனுடைய பிரதிபளிப்புக்கள் ஒவ்வொன்றும் அபிவிருத்தி பதவி ஆசைகள் பணம் போன்றவற்றை கொடுத்து தமது கைக்கூலிகளாக தமிழ் அரசியல் கட்சி தலைமைகளையும் தமிழ் அரசியல்வாதிகளை விலைக்கு வாங்கியும் தம்மோடு அரசாங்கம் இணைத்து செயற்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் அரசாங்கம் போடுகின்ற எலும்புத்துண்டை கவ்வியவர்களாக தமிழ் மக்கள் மத்தியில் வந்து அரசாங்கத்தை ஆதரித்து போலிப்பிரச்சாரங்களை செய்கிறார்கள். இவர்கள் செய்வது பிழைஎன்று தங்களுக்கு தெரிந்தும்தமது சுயலாப அரசியலுக்காக ஒரு இனத்தின் விடிவினை சீரழிக்கும் நோக்கில் செயற்படுவது தொடர்ந்தும் அந்த இனத்தை அதாள பாதாளத்திற்குள் தள்ளுகின்ற செயற்பாடாகவே அமைகின்றது. இலங்கையில் ஆட்சி செய்த ஆட்சியாளர்களின் வரலாற்றை எடுத்துப்பார்த்தால் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையை திட்டமிட்டு நடத்தியிருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

இனி நாம் என்ன செய்ய போகின்றோம் என்பது பற்றி சிந்திப்பது சிறந்தது ஒன்று. தமிழினத்தின் போராட்டத்தை திசை திருப்புகின்ற நடவடிக்கையாக அரசாங்கம் தொடர்ந்தும் அதனுடைய எச்சங்களையும் அழித்து வருகின்றது. அதன் முதலாவது கட்டமாக தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை சின்னாபின்னமாக உடைப்பதேயாகும். 22 ஆசனங்களை கைப்பற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பு படிப்படியாக குறைவடைந்து இன்று 10 ஆசனங்களுடன் இருப்பதை நாம் அவதானிக்க முடிகிறது. தமிழ் தேசிய கூட்டமைப்பு போலித் தேசியம் பேசுகின்றது என தமிழ் தரப்புகளே தமிழ் தரப்பிற்கு எதிராக பரப்புரையை செய்துவருகிறார்கள்.

உதாரணமாக இஸ்ரேலின் புலனாய்வு கட்டமைப்பான மொசாட் உலகளாவிய ரீதியில் திறமைவாய்ந்த ஒரு அமைப்பாகும். அவர்கள் குறிப்பாக அனைத்து நாடுகளிலும் இருக்கக்கூடிய கெரில்லா அமைப்புக்களுடன் தொடர்புடையவர்கள். இவர்கள் ஒரு நாட்டின் அரசாங்கத்திற்கும் பயிற்சி அளிக்கிறார்கள். அந்த நாட்டிலிருக்கும் ஆயுத கட்சிகளுக்கும் பயிற்சி அளிக்கிறார்கள். காரணம் என்னவென்றால் தங்களுடைய நாட்டை மீறி எந்த புலனாய்வு அமைப்புக்களும் செயற்படக்கூடாது என்பதே. அதுமட்டுமன்றி குறிப்பிட்ட நாடுகளில் இருக்கக்கூடிய புலனாய்வு கட்டமைப்புக்கள் பற்றியும் இவர்கள் இலகுவில் அறிந்து கொள்கிறார்கள்.

அது போன்று இலங்கை அரசும் தமிழ் மக்களிடையே இருக்கக்கூடிய ஆயுத கட்சிகளை உள்வாங்கிக்கொண்டு அவர்களை தம்மோடு இணைத்து பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருக்கிறது. இவர்களுக்கான ஊதியம் 25 ஆயிரம் தொடக்கம் 40 ஆயிரம் வரையிலான பணம் வழங்கப்படுகிறது. வடக்கில் மட்டும் 1000 பேரிற்கு அதிகமானவர்கள் முகவர்களாக செயற்படுகிறார்கள். 1500க்கும் மேற்பட்டோர் கிழக்கில் செயற்படுகிறார்கள். அதைவிடவும் இராணுவ புலனாய்வு துறையில் சிஐடி, டிஐடி, என்ஐவி போன்ற புலனாய்வு கட்டமைப்புகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள்.

இதைவிடவும் முஸ்லிம் தரப்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தை சிதைக்கும் வகையில் அரசாங்கத்துடன் இணைந்து இன்றுவரை செயற்பட்டு வருகின்றது. ஆனால் இன்று நிலைமை மாறி சிறுபான்மை சமுதாயத்தை அடக்கியாளுகின்ற அல்லது அவர்களை இல்லாதொழிக்கின்ற ஒரு செயற்பாடாக அரசாங்கம் தனது அரசியல் காய் நகர்த்தல்களை நகர்த்தி வருகின்றது. போராட்ட வரலாற்றில் அரசாங்கம் திட்டமிட்டு 244 இடங்களில் தமது இனப்படுகொலைகளை மேற்கொண்டுள்ளது.


இதுபற்றியெல்லாம் தமிழ் மக்கள், தமிழ் குழுக்கள் அறிந்துகொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. அடுத்து வருகின்ற தலைமுறை இந்த நாட்டில் நிம்மதியாக வாழுகின்ற ஒரு சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும். போராட்டத்தின் பொறுப்பை ஒரு இயக்கத்தின் மீதோ அல்லது தலைவர் பிரபாகரன் மீது மட்டும் விரலை காட்டிவிட்டு ஏனையவர்கள் ஒதுங்குவது ஏற்புடையதல்ல.

ஆகவே தற்பொழுது அரசியல் செயற்பாடுகளுக்காக இருக்கக்கூடிய தமிழ் தேசிய கூட்டமைப்பினுடைய கரங்களை பலப்படுத்த வேண்டும். அவ்வாறு பலப்படுத்துவதன் ஊடாகவே தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். அதற்கு வலு சேர்க்கும் வகையில் தற்பொழுது தமிழ் தேசிய மக்கள் முன்னணியினுடைய இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டுவருகின்றார்கள். ஆகவே தமிழ் மக்கள் சிந்தித்து செயற்படுவது தமிழினத்தின் விடிவினை பெற்றுத்தரும் இல்லையேல் ஆபத்து.

இரணியன்




## பிரபாசின் அடுத்த படத்தின் தலைப்பு!



தமிழ் தெலுங்கு மொழிகளில் பிரபல நடிகராக இருக்கும் பிரபாசின் அடுத்த படத்தின் தலைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அளவில் 'கே.ஜி.எ.ஃப்' படத்தின் பிரம்மாண்ட வெற்றியால்பிரபலமடைந்த தயாரிப்பு நிறுவனம் ஹொம்பாளே பிலிம்ஸ். வித்தியாசமான களங்கள், பிரம்மாண்டமான படைப்புகள் என தொடர்ச்சியாக வெற்றிகரமாகப் பயணித்து வருகிறது. தற்போது 'யுவரத்னா' மற்றும் 'கே.ஜி.எ.ஃப் சேப்டர் 2' ஆகிய படங்களைப் பிரம்மாண்டமாகத் தயாரித்து வருகிறது.

ஹொம்பாளே பிலிம்ஸ் நிறுவனர் விஜய் கிரகண்தூர் தங்களது அடுத்த பிரம்மாண்ட தயாரிப்பை அறிவித்துள்ளார். இந்திய திரையுலகின் முன்னணி நடிகரான 'டார்லிங்' பிரபாஸ் நாயகனாக நடிக்கவுள்ள இப்படத்தை 'கே.ஜி.எ.ஃப்' படங்களின் மூலம் நம்மை அசரவைத்த இயக்குநர் பிரஷான்த் நீல் இயக்கவுள்ளார். பெரும் பொருட்செலவில் பிரம்மாண்டமாகத் தயாராகவுள்ளது.

பிரபாஸ்இந்நிலையில் இப்படத்திற்கு சலார் என்று தலைப்பு வைத்து பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். இந்த போஸ்டர் தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

## சூர்யா நடிக்க இருக்கும் புதிய படத்தை பற்றிய தகவல்கள்

சூரரைப்போற்று திரைப் படத்தை அடுத்து, சூர்யா அடுத்ததாக நடிக்க இருக்கும் புதிய படத்தை பற்றிய புதிய தகவல்கள் வெளியாகியுள்ளது.

சூர்யா நடித்த 'சூரரைப்போற்று' திரைப்படம் சமீபத்தில் ஓடிடியில் வெளியாகி மிகப்பெரிய வரவேற்பை பெற்றது.ரசிகர்கள் மட்டுமில்லாமல், விமர்சகர்கள், பிரபலங்கள் பலரும் படத்தை பார்த்து பாராட்டினார்கள்.

இந் நிலையில் இத் திரைப்படத்தை அடுத்து 'சூர்யா 40' படத்தின் அறிவிப்பு சமீபத்தில் வெளியானது.சன் பிக்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் இயக்குனர் பாண்டிராஜ் இயக்கவுள்ள இப் படத்தின் ஆரம்பகட்ட பணிகள் தொடங்கி விட்டதாக கூறப்பட்டது. இந் நிலையில் 'சூர்யா 40' படத்தின் ஆரம்பகட்ட பணிகள் முடிவடைந்து விட்டதாகவும் விரைவில் படப்பிடிப்பு தொடங்க இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளது.

அதுமட்டுமின்றி இந்த படத்தில் சூர்யாவுடன் நடிக்கும் நடிகர், நடிகைகள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாக இருப்பதாக கூறப்படுகிறது.

இதனால் சூர்யா ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர். பாண்டிராஜ் இயக்கும் படத்தை முடித்துவிட்டு சூர்யா அடுத்ததாக வெற்றிமாறன் இயக்கும் 'வாடிவாசல்' படப்பிடிப்பில் இணைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## 93ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழா எப்போது நடைபெறும் தெரியுமா ?

93ஆவது ஒஸ்கார் விருது வழங்கும் விழா அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சி கண்டிப்பாக காணொலி வாயிலாக நடைபெறாது எனவும், அதே சமயம் கொரோனா அச்சுறுத்தலால் எத்தனை பேர் நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள் என இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும், ஒஸ்கார் விருது வழங்குவோர் தரப்பிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.



## நீண்ட இடைவேளைக்கு பிறகு ஓவியா நடத்திய வைரல் போட்டோ சூட்

நடிகை ஓவியா ஒரு காலத்தில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் தலையில் தூக்கி வைத்துக்கொண்ட பிரபலம்.

ஹிட் படத்தில் நடித்ததால் இந்த அளவிற்கு பிரபலமா என்றால் இல்லை, அவர் பிக்பாஸ் முதல் சீசனில் கலந்துகொண்டு எல்லோரையும் கவர்ந்ததால் அதிகம் பிரபலம் ஆனார்.

நிகழ்ச்சி பிறகு அவர் நிறைய படங்கள் நடிப்பார் என்று எதிர்ப்பார்த்தால் அவ்வளவாக அவரை படங்களில் காண முடியவில்லை.

இந்த நிலையில் ஓவியா நீண்ட இடைவேளைக்கு பிறகு அழகிய போட்டோ சூட் நடத்தியுள்ளார். அந்த புகைப்படங்கள் தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.








## முடி உதிர்வை தடுத்து நன்கு வளர வேண்டுமா....?



முடி கருப்பாக ஆலமரத்தின் இளம்பிஞ்சு வேர், செம்பருத்தி பூ இடித்து தூள் செய்து தேங்காய் எண்ணெயில் காய்ச்சி ஊறவைத்து தலைக்கு தேய்த்து வர முடி கருப்பாகும்.

வேப்பிலை ஒரு கைப்பிடி எடுத்து நீரில் வேகவைத்து ஒரு நாள் கழித்து வேகவைத்த நீரைக் கொண்டு தலை கழுவி வந்தால் முடி கொட்டுவது நின்று விடும்.

கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் பொடிகளை கலந்து இரவில் தண்ணீரில் காய்ச்சி ஊறவைத்து காலையில் எலுமிச்சை பழச்சாறு கலந்து கலக்கி தலையில் தேய்த்து குளித்து வர முடி உதிர்வது நிற்கும்.

வெந்தயம், குன்றிமணி பொடி செய்து தேங்காய் எண்ணெயில் ஊறவைத்து ஒரு வாரத்திற்கு பின் தினமும் தேய்த்து வந்தால் முடி உதிர்வது நிற்கும்.

வழுக்கையில் முடி வளர கீழ்நெல்லி வேரை சுத்தம் செய்து சிறிய துண்டாக நறுக்கி தேங்காய் எண்ணெய்யில் போட்டு காய்ச்சி தலைக்கு தடவி வந்தால் வழுக்கை மறையும்.

இளநரை கருப்பாக நெல்லிக்காய் அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் இளநரை கருமை நிறத்திற்கு மாறும். காய்ந்த நெல்லிக்காயை பவுடராக்கி தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து கொதிக்க வைத்து வடிகட்டி தேய்த்துவர முடி கருமையாகும்.

தலை முடி கருமை மினுமினுப்பு பெற அதிமதுரம் 20 கிராம், 5 மில்லி தண்ணீரில் காய்ச்சி ஆறிய பின் பாலில் ஊற வைத்து 15 நிமிடம் கழித்து கூந்தலில் தடவி ஒரு மணி நேரம் ஊறவைத்து குளிக்க வேண்டும்.

செம்பட்டை முடி நிறம் மாற மரிக்கொழுந்து இலையையும் நிலாவரை இலையையும் சம அளவு எடுத்து அரைத்து தலைக்கு தடவினால் செம்பட்டை முடி நிறம் மாறும்.




**பிறப்பில் அனைவரும்**
**இராவணர்களே!**

**உலகில் அனைவரும் பத்து**
**தலையோடு**
**தான் வடிவமைக்கப்படுகின்றோம்**

**பத்து தலையில் சிலவற்றைக்**
**குறைத்துக்கொண்டவர்கள்**
**தலைமுறைக்கு தேவைப்பட்டார்கள்**

**அதில் சிலவற்றில் சேர்த்தும்**
**சிலவற்றை தவிர்த்தும்**
**வாழ்ந்தவர்கள்**
**தலைவனாகினர்.**

**மீதமிருந்தவர்கள் நமக்கு**
**தத்துவமானார்கள்**
**தத்துவம் தந்தார்கள்**

**வருங்காலம் சிறப்புற**
**உங்கள் கவனம்**
**உங்கள் தலைகளில் மட்டுமே...**

-கிஷா-

## பாலுடன் சேர்த்து சாப்பிடக்கூடாத பொருட்கள்!

பாலுடன் சில பொருட்களை சேர்த்து சாப்பிடுவது உடல் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும்.

மீனை, பாலுடன் ஒன்றாக எடுத்துக்கொள்வது தவறு. மீன் மற்றும் பாலை ஒன்றாக எடுத்துக்கொள்ளும்போது, ரத்தம் கெட்டுப்போய், உடலின் நுண்ணியப் பாதைகள் அடைக்கப்படுகின்றன. சீரான ரத்த ஓட்டம் பாதிப்பு அடையும்.

அதேபோல், பாலுடன் வாழைப்பழத்தைச் சேர்த்துச் சாப்பிடக் கூடாது. இதனால், உடலில் சளி அதிகம் தேங்கும்.

தர்பூசணி சாப்பிட்ட பிறகு பால் குடித்தால், அது அசௌகரியம் தருவதோடு, வாயுத்தொல்லையையும் ஏற்படுத்தும்.

பால் மற்றும் முட்டை இரண்டிலும் அதிகப் புரதம் இருப்பதால், இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொண்டால், செரிமானப் பிரச்சனைகள் ஏற்படும்.

கீரையும் பாலுடன் சேர்த்து சாப்பிடக் கூடாத உணவுகளில் ஒன்று. கீரைகளில் செல்லுலோஸ் அதிகம் உள்ளதால், செரிமானம் நடைபெற இயல்பாகவே அதிகம் நேரம் எடுக்கும். கீரையில் உள்ள டானின், பாலை திரளச்செய்வதால், செரிமானப் பிரச்சனைகளை ஏற்படுத்தும்.



தொகுப்பு :- சப்தஹி



06ஆம் பக்க தொடர்ச்சி...

ஆனால் அநுராதபுரத்திலும். இலங்கையின் ஏனைய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பெரும்பாலான ஆதிகால. இடைக்கால ஆலயங்கள் இலங்கையின் மரபுரிமைச் சின்னங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டு பிற்காலத்தில் அவை சுற்றுலாத் துறையின் முக்கிய மரபுரிமை மையங்களாகவே செயல்பட்டு வருகின்றன. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயம் கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து 1964 ஆம் ஆண்டு வரை அங்கு வாழ்ந்த மக்களின் பிரதான வழிபாட்டு ஆலயமாகவே இருந்துள்ளது. இந்த உண்மையை அவ்வாலயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களும். ஆலய மணியில் பொறிக்கப்பட்டிருக்கும் சாசனமும். அங்கு பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களின் நில உரிமைப் பத்திரங்களும் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாலயதின் பழமையையும். அதன் வரலாற்றுப் பெறுமதியையும் ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டியதைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட சக்தி தொலைக்காட்சி நிறுவனம் இவ்வாலயத்தை ஆவணப்படுத்த முன்வந்தது. இதற்காக அரச திணைக்கள அனுமதியுடன் அன்றைய சக்தி வானொலி அலைவரிசை பிரதானி திருமதி உமாச்சந்திரா பிரகாஷ் தலைமையில் தற்போதைய சக்தி வானொலி அலைவரிசை பிரதானி ஆர்.பி. அபர்ணா சுதன். திரு. ஞா.கணாதீபன் முதலியோரைக் கொண்ட குழுவினரை திருமங்கலாய்க்கு அனுப்பி வைத்தது. அவர்கள் ஏழு மையில் தூரம் கால் நடையாகவும். உழுவு இயந்திரத்திலும் அச்சத்துடன் காட்டு வழியாகப் பயணம் செய்து திருமங்கலாய் சிவன் ஆலயத்தில் காணப்பட்ட அனைத்து ஆதாரங்களையும் ஆவணப்படுத்தினர். இவ்வரிய பணியால் ஆய்வில் ஈடுபட்ட எமக்கும். அங்கு கூடியிருந்த மக்களுக்கும். தனது காலத்திலேயே இவ்வாலயத்தை மீளுருவாக்கம் செய்திட வேண்டும் என அயராது உழைத்து வரும் திரு.வி.முத்துலிங்கத்திற்கும் பெரும் மகிழ்ச்சியையும். நம்பிக்கையும் ஏற்படுத்தி இருந்தது.

இவ்வாலயத்தை ஆவணப்படுத்திய சக்தி தொலைக்காட்சி நிறுவனம் அது பற்றிய செய்தியை மக்களிடம் கொண்டு சென்ற போது இவ்வாலயம் பற்றி மேலும் அறிய வேண்டும். நேரில் பார்வையிட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. இதை உணர்ந்து கொண்ட நாம் இவ்வாலயத்தை மீளுருவாக்கம் செய்து பாதுகாக்கும் நோக்கில் திருமதி உமாச்சந்திரா பிரகாஷ் அவர்களுடன் இணைந்து பல முயற்சியகளில் ஈடுபட்டோம் அதற்காக சம்பந்தப்பட்ட திணைக்களங்கள். அமைச்சின் அதிகாரிகள். கௌரவ இராஜங்க கல்வி அமைச்சர் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலியோரின் உதவிகளை நாடினோம். இலங்கைத் தொல்லியற் திணைக்களம் தனது அதிகாரிகளை அனுப்பி இவ்வாலயத்தின் பழமையை உறுதிப்படுத்திக் கொண்டது. மத்திய கலாசார நிதியம் ஆலயத்தை மீள்புனரமைப்புச் செய்வதைப் பரிசீலிப்பதாகப் பதில் அனுப்பியது. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் எமது கோரிக்கைகளைச் சாதகமாகப் பரிசீலிக்க முன்வந்த அதிகாரிகளும் பதவி மாற்றம் செய்யப்பட்டதால் தற்போது எல்லா முயற்சிகளையும் நாம் ஆரம்பத்தில் இருந்தே தொடங்கவேண்டிய நிலையில் உள்ளோம். அதற்கு நாட்டின் தற்போதைய நிலையும் சாதகமாகக் காணப்படவில்லை..

இருப்பினும் விலைமதிக்க முடியாத எமது மரபுரிமைச் சின்னம் ஒன்று எம் கண்முன்னே மண்ணுக்குள் மறைந்து போவதை வேடிக்கை பார்க்கும் நிலையும் இல்லை என்றே நம்புகின்றோம். ஏனெனில் கடந்த முப்பது ஆண்டுகால அனர்த்தத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிய போது தமது இருப்பிடங்களைக் காட்டிலும் தமது வழிபாட்டு ஆலயங்களை மீளுருவாக்கம் செய்வதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்த பெருமைக்குரியவர்கள். . இது மதத்தின் மீது எமது மக்களுக்கு உள்ள அதீத நம்பிக்கையைக் காட்டுகின்றது. ஆனால் திருமங்கலாய் சிவன் ஆலயம் ஒரு வழிபாட்டு ஆலயமாக மட்டும் பார்க்க முடியவில்லை. பலதரப்பட்ட மக்களின் பார்வையில் இவ்வாலயம் இலங்கையில் உள்ள தேசிய மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாக நோக்கப்படலாம். ஆனால் இந்து மக்களைப் பொறுத்தவரை இவ்வாலயம் அவர்களின் எதிர்காலச் சந்ததனரிடம் கையளிக்கப்பட வேண்டிய நம்பிக்கை நாற்று. அதற்கும் அப்பால் இலங்கையில் இந்து மதத்திற்கு நீண்ட வரலாறு உண்டு என்பதை அடையாளப்படுத்தும் விலை மதிக்க முடியாத மரபுரிமையின் அடையாளம். இம்மரபுரிமைச் சின்னங்களுக்குப் பின்னால் தமிழ் மக்களின் வரலாறும். பண்பாடும் பொதிந்து காணப்படுகின்றது. ஆகவே இவ்வாலயத்தை மீட்டெடுத்து. மீளுருவாக்கம் செய்து. பாதுகாக்க அனைத்து தமிழர்களும் ஒன்றிணைந்து உழைக்க முன்வர வேண்டும். இப்பணி அரசியல். பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இந்த உண்மையை உரியவர்களிடம் கொண்டு செல்வதற்கு எமது தகவல் தொடர்புச் சாதனங்கள் தமது பணியை தொடர்ந்தும் செய்வார்கள் என்ற நம்பிக்கை எப்போதும் எமக்குண்டு.



# வாழ்க்கை தத்துவம்

**நமக்கு வாழ்கை பல அனுபவங்களையும் பாடங்களையும் கற்றுத் தருகின்றது அதில் முக்கியமான ஒன்று தான் நாம் யார் யாரிடம் எவ்வாறு பழக வேண்டும் எந்த அளவோடு பழக வேண்டும் என்பது.**

**உங்கள் மீது அதீத நம்பிக்கை வைத்திருப்பவர்களை ஏமாற்றுவது புத்திசாலித்தனம் என்று நினைக்காதீர்கள் அது தான் துரோகத்தின் உச்சம்.**

**உங்களுக்கு தெரிந்த விடயங்களை மட்டும் மற்றவர்களுடன் பேசி பழகுங்கள் இது காலப்போக்கில் உங்கள் மீதான நம்பிக்கை மற்றும் மரியாதையை அதிகப்படுத்தும்.**

**சந்தோஷமான நேரத்திலும் துன்பமான நேரத்திலும் நாம் நினைவில் வைத்திற்க்க வேண்டிய ஒரு உண்மை இந்த நிமிடம் கூட நிரந்தரம் இல்லை.**

**நினைவில் வைத்துக் கொள் உன் வாழ்க்கையில் உறக்கம் இரக்கம் இரண்டும் அளவோடு தான் இருக்க வேண்டும். உறக்கம் அளவுக்கு மீறினால் சோம்பேறி என்பார்கள். இரக்கம் அளவுக்கு மீறினால் ஏமாளி என்பார்கள்.**

**கடன்களும் நினைவுகளும் தேவைக்கு ஏற்ப அளவோடு இருக்க வேண்டும். கடன்களும் நினைவுகளும் அளவுக்கு மீறினால் இரண்டுமே தூக்கத்தை பறித்து விடும்.**

**வாழ்வில் வரும் வலிகளை சிரித்துக் கொண்டே கடந்து போக பழகிக் கொள்ளுங்கள். அப்படியே சிரித்துக் கொண்டே கடந்து போக பழகிக் கொண்டால் உன்னை விட வலிமையானவர்கள் யாரும் இல்லை இந்த உலகில்.**

**ஒரு தவறை செய்தால் ஒதுக் கொள்ள எந்த சூழ்நிலையிலும் தயங்காதீர்கள் அவற்றை சரி செய்து கொள்ள முடியும். ஆனால் செய்த தவறை இல்லை என்று சாதிக்காதீர்கள் பிறகு அவற்றை வாழ்நாளில் சரி செய்ய முடியாது.**

**மற்றவர்களிடம் குற்றம் என அடையாளம் காணும் விடயம் நம்மக்கு ஏற்பட்டால் அதை சோதனை என்று அழைக்கிறோம்.**

**உன் பாதையை நீயே உருவாக்கிக் கொள்ளும் தண்ணீராக இரு. வாழ்வில் எதையும் சாதிக்கலாம். அடுத்தவர் பாதையை தடுக்கும் பாறையாக இருந்து விடாதே.**

**மனதில் நஞ்சு வைத்து உதட்டில் தேனாக கொஞ்சி பேசும் மனிதர்களும் இந்த உலகில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை மறந்து விடாதே.**

**காகமும் குயிலும் பார்ப்பதற்கு இரண்டும் ஒன்று போல தான் தோற்றமளிக்கும். ஒருவரின் வெளித்தோற்றத்தை வைத்து ஒருவரை மதிப்பிடாதீர்கள்.**

**உணர்ச்சிகள் என்ற ஒன்றை உனக்கு அடக்க தெரிந்தால் வாழ்க்கையில் வரும் அனைத்து கஷ்ட நஷ்டங்களாலும் உன்னை ஒன்றும் செய்து விட முடியாது.**

**நேர்மையான குணம் கொண்டவர்களுக்கு என்றுமே இந்த உலகில் மதிப்பு இல்லை தான் ஆனால் நிற்சயமாக உன் நல்ல மனதுக்காக அந்த இறைவனின் பரிசு கட்டாயம் கிடைக்கும்.**

**வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும் என்ற சிந்தனை உனக்குள் வந்து விட்டாலே பொறுப்பு என்பது தன்னாலே அமைந்து விடுகிறது.**



# விடுதலைப்புலிகள் மீதான அரசின் பயங்கரவாத தடைச்சட்டம் ஆபத்தானது




இலங்கையில் சிறுபான்மை இனம் மீது தமது அடக்கியாளும் கொள்கையை பெரும்பான்மை இனம் மேற்கொண்ட பொழுது சிறுபான்மையினம் அகிம்சை வழி ஆயுத வழியென போராட்டங்களை மேற்கொண்டனர் 1970கள் வரை அகிம்சை வழியான போராட்டங்கள் இடம்பெற்றன. சிறுபான்மையின தமிழினம் தமது பண்பாடு கலாச்சாரம்கல்விபோன்றவற்றில்எழுச்சியுற்று காணப்பட்ட நிலையில் கல்வி,வேளையில் ஓர் உன்னதமான இடத்தில் இருந்தார்கள். அக்காலகட்டங்களிலும் சுதந்திரத்திற்கு முன்னரானபிரித்தானியஆட்சிக்காலங்களிலும் தமிழர்கள் உயர் அரச பதவிகளில் கோலோச்சி இருந்த காலம் கல்விதான் தமிழர்களின் உயிர் மூச்சாக இருந்த காலம் சிங்கள இனத்தை விட தமிழினம் ஆங்கிலத்தில் பெரும் புலமையுற்று இருந்தகாலம் இந்நிலையில் எந்த கல்வி தமிழனை உயர்ந்த இடத்தில் வைத்திருக்கின்றதோ? எக்கல்வி தமிழனை உயர் பதவியில் இருத்தியோ? அக்கல்வியை சிதைத்து அதனை அழித்தொழிக்கும் செயற்பாட்டில் சிங்கள பேரினவாத தலைமைகள் ஈடுபடத்தொடங்கின தரப்படுத்தல் கொள்கை மூலம் தமிழனின் கல்வியை சிதைக்க முடிவெடுத்தது. ஓர் இனத்தின் இருப்பை ஓர் இனத்தின் பொருளாதாரக்கட்டமைப்பை அதன் கலாச்சார பண்பாடுகள் இவை அனைத்தையும் ஒருங்கே கட்டமைப்பது கல்வி. அந்த கல்வியை சிதைத்தால் படிப்பறிவற்ற மூட இனமாக மாறும்.

ஆகவே தான் இந்த சிங்களப் பேரினவாத தலைமைகள் கல்வி தரப்படுத்தலை கொண்டு வந்து தமிழர்கள் சிதைக்க முயன்றது. தரப்படுத்தலுக்கு எதிராக பல்கலைக்கழகம் சமூகம் அகிம்சை வழியில் போராடி பார்த்தது முடியவில்லை தமது பாதையை ஆயுத வழிக்கு மாற்றினர். ஆயுதப் போராட்டம் உருவெடுத்தது. கெரில்லா முறையிலான அரச எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்றன. அதனை இரும்புக்கரம் கொண்டு அடக்க 1979 நடுப்பகுதியில் அப்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் வட பகுதியில் அரசுக்கு எதிராக போராடிய தமிழ் அமைப்புகளை பயங்கரவாத தடைச்சட்டம் என்ற சட்டத்தை உருவாக்கி அப்பாவி தமிழ் இளைஞர்களை கைது செய்து சித்திரவதை செய்து கொன்றது பயங்கரவாத தடைச்சட்டம் மூலம் கேட்பார் இன்றி கைது செய்து சிறையில் அடைத்தது. அது மட்டுமன்றி இச்சட்டத்தின் மூலம் கண்ட இடத்தில் சுட்டுக்கொல்ல பொலிசாருக்கும் இராணுவத்துக்கும் அனுமதி வழங்கியது. இவ்வாறு ஆரம்பமான இந்த பயங்கரவாத தடைச்சட்டமானது இன்று வரை தொடர்ந்து கொண்டு இருக்கின்றது.

அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தில் பல இயக்க அமைப்புகள் தோன்றினாலும் விடுதலைப்புலிகள் அமைப்பானது தனது கொள்கைமாற நிலையிலும் மக்களின் விடுதலைக்காக தமது போராட்ட பயணத்தை தொடர்ந்தனர். இலங்கை அரசானது விடுதலைப்புலிகள் அமைப்பு மீது பயங்கரவாத தடைச்சட்டத்தை இறுக்கியது. அத்துடன் அவர்களை பயங்கரவாதிகள் தீவிரவாதிகள் என விழிக்க தொடங்கியது. இலங்கைக்குள் மட்டுமல்லாது அவ் இயக்கத்தை வெளி நாடுகளிலும் தடைசெய்ய முனைந்தது. அதில் அது வெற்றியும் பெற்றது. இந்த பயங்கரவாத தடைச்சட்டம்மூலம் தமிழினம் சொல்லொன்ன துயரை அடைகின்றது. இப்பயங்கரவாத தடைச்சட்டத்தை காட்டி 1979 முதல் எண்ணிலடங்கா அப்பாவி தமிழ் இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். இப்பயங்கரவாத தடைச்சட்டத்தை காட்டி தமிழர்களின் குரல் வளையை இப்பேரினவாத அரசு நெரிக்க தொடங்கியது. விடுதலைப்புலிகள் பலம்பெற்று இருந்த காலங்களில் தொழில் நிமித்தம் கல்வி தொடர்பாக கொழும்பு சென்ற பல அப்பாவி தமிழ் இளைஞர் யுவதிகள் இச் சட்டத்தை காட்டி கைது செய்து சிறையில் பல ஆண்டுகள் அடைக்கப்பட்டுள்ள மிகப்பெரும் கொடுமைகள் நடந்தேறியது. **தமிழன் என்றால் அது புலியென்ற மாயையை சிங்களத் தலைமைகள் அப்பாவி சாதாரண சிங்கள மக்களுக்கும் புகுத்தி விட்டனர்.**

2009ஆம் ஆண்டு உலக வல்லரசுகளுடன் இணைந்து முள்ளிவாய்க்கால் மண்ணில் விடுதலைப்புலிகளையும் அப்பாவி தமிழ் மக்களையும் புதைத்ததோடு விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் முற்றுப்பெற்றது என்றும் தமிழர்களின் ஆயுத ரீதியான பலம் அழிக்கப்பட்டுவிட்டதென்றும் விடுதலைப்புலிகளின் தலைமை அழிக்கப்பட்டது என்றும் நாடு மீண்டும் ஒரு முறை சுதந்திரம் அடைந்து விட்டதாகவும் இனிமேல் ஒருநாடு ஒரே மக்கள் என்ற சிந்தனையுடன் வாழ்வோம் தமிழர் சிங்களவர் முஸ்லிங்கள் என எல்லோரும் ஒற்றுமையாக வாழ்வோம். தமிழர்கள் தங்களின் மதம் கல்வி போக்குவரத்து எல்லாவற்றிலும் சுதந்திரமாக செயல்படலாம் என சிங்கள அரசியல் தலைமைகள் கூறி நிற்கின்றன. இன்று ஆயுதப்போராட்டம் முற்றுப்பெற்று 11 ஆண்டுகாலம் கடந்து விட்ட நிலையில் விடுதலைப்புலிகள் மீதான தடை அல்லது தமிழ்மக்கள்மீதான பயங்கரவாததடையானது இன்னும் நீக்கப்படாமலில்லை.

அரசு 2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளை முற்றாக அழித்து விட்டதாக வெற்றி விழா கொண்டாடியநிலையில்இப்பொழுது அவர்கள் மீதான தடையை நீக்க ஏன் அஞ்சுகின்றது. இந்த பயங்கரவாத தடைச்சட்டமானது விடுதலைப் புலிகளுக் கானதா? அல்லது ஒட்டுமொத்த சிறுபான்மை தமிழினத்துக்கானதா? ஏனெனில் இன்று புலிகள் இல்லை அரசின் பார்வையிலான பயங்கரவாத தாக்குதல்கள் நடக்கவில்லை. குண்டு வெடிப்புக்கள் இடம்பெறவில்லை. இருந்தும் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. மீண்டுமொரு ஆயுதப்போராட்டம் உருவாகும் என அரசு அஞ்சுகின்றதா? இல்லை இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி தனக்கு எதிராக இடம்பெறும் போராட்டங்களை கட்டுப்படுத்த மேலும் பல ஆண்டுகாலமாக கேட்பாரற்று சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விட வேண்டிய அவசியம் இல்லை அத்துடன் தனது நிறைவேற்று அதிகாரம் கொள்கையை நிலைநிறுத்ததேவையானதுஇந்தபயங்கரவாத தடைச்சட்டம்நாடுமுழுவதும்முப்படையினரை நிறுத்தி வைக்க இந்த பயங்கரவாத தடைச்சட்டம் தேவை. இவ்வாறு 1978இல் இருந்து வந்த ஆட்சியாளர்கள் அனைவரும் இக் கொள்கையின் அடிப்படையிலேயே ஆட்சியை புரிந்து வந்துள்ளனர்.

ஆனால் இப்பொழுது இந்த பங்கரவாத தடைச்சட்டமானது தமிழர்களின் தார்மீக உரிமைகள் அவர்களது பாரம்பரிய சமய அனுஷ்டானங்கள் அனைத்தையும் இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி இல்லாதொழிக்க முயல்வதாக தெரிகின்றது. அண்மையில் இலங்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டில் கூட இந்த பயங்கரவாத தடைச்சட்டம் ஆதிக்கம் செலுத்தியுள்ளது. ஆம் பாதீட்டில் பாதுகாப்பு ஒதுக்கப்பட்டுள்ள தொகையானது யுத்தகாலத்தில் போர் உக்கிரமாக இடம்பெற்ற காலத்தில் கூட இவ்வாறான நிதி ஒதுக்கப்படவில்லை. இன்று போர் முடிந்துவிட்டது. புலிகளும் இல்லாதொழிக்கப்பட்ட நிலையில் எந்த நாட்டுடன் போர் புரிய இவ்வளவு நிதி ஒதுக்கப்படுகின்றது. இந்தியாவுடனா? அல்லது அமெரிக்காவுடன் போர் இடம்பெறப்போகின்றது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கினால் இவ்வாறான அதிக நிதி ஒதுக்க தேவையில்லை. அவ்வாறு பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு இவ்வாறு அதிக நிதி ஒதுக்கப்பட்டால் மக்களுக்கு யார் பதில் சொல்வது எதிர்கட்சிகளுக்கு யார் பதில் சொல்வது.

ஆகவே இந்த பயங்கரவாத தடைச்சட்டமானது அரசுக்குகொரு பாதுகாப்பு வேலியானது தமிழ் மக்களின் சாத்வீகமான போராட்டங்கள் அனைத்தையும் இப் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி அடக்கும் இந்த அரசு அண்மையில் இந்த அரசு ஜனாதிபதி பதவியை ஏற்றவுடன் தமிழ் மக்கள் மீது தனது மறைமுகமான அடக்குமுறைகளை மெதுவாக கட்டவிழ்த்துவிட தொடங்கினர். தமிழ் மக்களுக்காக அகிம்சை வழியில் போராடி உயிர்நீத்த தியாகி திலீபனின் 33ஆம் ஆண்டு நினைவு தினத்தை அனுஷ்டிக்க தடைவிதித்து தனது அடக்குமுறை ஆட்டத்தை ஆரம்பித்தது. அதன் பின்னர் தமிழ் மக்களுக்காக போராடி உயிர்நீத்த மாவீரர்களை தமது பிள்ளைகளை தமது உறவுகளை நினைவுகொள்ள நீதிமன்றங்கள் ஊடாக தடை விதித்தது. மீறி செயற்பாட்டால் பயங்கரவாத தடைச்சட்டத்தை காட்டி கைது செய்து சிறையில் அடைக்கப்படுவார்கள் என எச்சரிக்கை பண்ணியது. அவ்வாறு மீறித் தமது உறவுகளுக்கு விளக்கேற்றியவர்கள் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது அவர்கள் ஒளிப்படம் எடுக்கப்பட்டனர். துயிலுமில்லங்கள் அனைத்திலும் இராணுவம் பொலிசார் குவிக்கப்பட்டனர். தமது உறவுகளை நினைவேந்த முடியாத அளவுக்கு இவ் அரசானது பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றது. மாவீரர் தினம் நிறைவு நாளை அடுத்து சில தினங்களில் வந்த தமிழ் மக்களின் குறிப்பாக இந்துக்களின் புனித நாளான கார்த்திகை தீபம் நாள் அன்று கோயில்கள் வீடுகளில் தீபம் ஏற்ற முற்பட்ட அனைவருக்கும் இராணுவம் பொலிசார் அச்சுறுத்தல் விடுத்தது மட்டுமல்லாது விளக்குகளை தங்கள் கால்களால் தட்டி மிதித்து கோயில்களில் கட்டப்பட்டு இருந்த வாழைகளை பிடுங்கி எறிந்த தமது அராஜக தனத்தை காட்டினர். இவ்வாறு அரசு பயங்கரவாத தடைச்சட்டம் என்ற போர்வையில் தனது பயங்கரவாதத்தை தமிழ் மக்கள் மீது காட்டுகின்றது. அத்துடன் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் பாராளுமன்ற உரைகளில் இனவாத மதவாத கருத்துக்களை அனலாக கக்குவது கடந்த சில நாட்களாக அதிகரித்து காணப்படுகின்றது. தமிழ் மக்களால் ஜனநாயக ரீதியில் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளை கூட பயமுறுத்தும் செயற்பாட்டில் அவரது அமைச்சர்கள் ஈடுபடுகின்றனர். அண்மையில் பதவியேற்றுள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர என்பவர் தமிழ் தேசியக்கூட்டமைப்பை தடைசெய்ய வேண்டிவரும் என்றும் விடுதலைப்புலிகளை ஆதரித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார். இன்னோர் அமைச்சரான தினேஸ் குணவர்த்தன அவர்கள் உங்கள் உறவினர்களின் நினைவுகளை அஞ்சலிக்க வேண்டுமானால் வெளிநாடுகளுக்கு சென்று அஞ்சலியுங்கள் என்று கூறியுள்ளார். இவ்வாறு கடந்த சில நாட்களாக இன வன்முறையையும் இளக்குரோதமான முறையிலும் இவர்கள் பாரளுமன்றில் பேசுவதானது பயங்கரவாதம் இல்லையா? அத்துடன் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் மூலம் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் இங்கு வந்து தமது தாய் நிலத்தை தரிசிக்க முடியாத அவல நிலை காணப்படுகின்றது.

ஆகவே இந்த அரசு தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு வழுங்கவேண்டுமாக இருந்தால் அல்லது தமிழ் மக்களுக்கு குறைந்தளவு தீர்வையாவது வழங்க வேண்டுமாக இருந்தால் அதற்கான பிள்ளையார் சுழி இப்பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் பிரித்தானியாவில் செயல்பட்ட ஐ.ரி.எஸ் இயக்கத்தை பிரித்தானிய அரசு தடை செய்ததுடன் பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்தியது தற்பொழுது ஐ.ரி.எஸ் பிரித்தானியாவால் தடை நீக்கப்பட்டுள்ளது. பலஸ்தீன விடுதலை இயக்கத்தை தடை நீக்கப்பட்டுள்ளது. எமது நாட்டிலும் மூன்று இனமக்களும் ஒற்றுமையாகவும் சுபீட்சத்துடனும் ஐக்கியத்துடனும் நாட்டின் இறைமையை பாதுகாத்து செயல்பட வேண்டுமாயின் இந்த பயங்கரவாத தடைச்சட்டம் என்ற இருட்டுமாயை நீங்கி சிங்கள தமிழ் மக்களுக்கிடையேயான சந்தேகம் பழி உணர்ச்சி அனைத்தும் நீங்கி ஒருவரையொருவர் புரிந்துகொண்டு இனக்குரோதத்தின் அடையாளமானா இத்தடையை இவ் அரசானது நீக்க வேண்டும். இல்லாவிடில் இப்பயங்கரவாத தடைச்சட்டமானது மேலும் இனக்குரோதமும் சந்தேகமும் பழி உணர்ச்சியும் அதிகரித்து எமது நாடு அதளா பாதாளத்தை நோக்கி நகர்ந்து செல்லும் என்பதில் ஐயமில்லை.

**தாயகத்தான்**

# அறிவியல் உலகம்


## புவியீர்ப்பு இல்லாத சர்வதேச விண்வெளி நிலையத்தில் முள்ளங்கியை வெற்றிகரமாக வளர்த்த நாசா!

மைக்ரோகிராவிட்டி எனப்படும் புவியீர்ப்பு சக்தி இல்லாத சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில், முள்ளங்கிச் செடிகளை நாசா வெற்றிகரமாக வளர்த்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சந்திரன் மற்றும் செவ்வாய்க்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் உள்ளதால், எதிர்கால விண்வெளி வீரர்களுக்கு புதிய உணவை அளிக்கும் திட்டத்துடன், இம் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது.

செடிகள் வேர் விடுவதற்கு அத்தியாவசியமான புவியீர்ப்பு சக்தி இல்லாததால், தலையணை போன்ற வடிவமைப்பு ஒன்றில், உரம் மற்றும் நீர் கிடைக்கும் வகையில் இச் செடிகள் வளர்க்கப்பட்டதாகவும் சிவப்பு மற்றும் நீல ஒளி உமிழும் விளக்குகள் வாயிலாக அவற்றுக்கு வெப்பம் ஊட்டப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.


மேலும் அமெரிக்காவின் புளோரிடாவிலுள்ள கென்னடி விண்வெளி கட்டுப்பாட்டு அறையிலிருந்து, விஞ்ஞானிகள் முள்ளங்கிச் செடிகள் வளர்வதை சென்சர்கள் வாயிலாக கண்காணித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கியது சீனாவின் `Chang e 5` லேண்டர் !

சீனாவின் ஆராய்ச்சி விண்கலமான சாங் இ-5 ( Chang'e 5 mission) லேண்டரானது திட்டமிட்டபடி நிலவின் மேற்பரப்பில் வெற்றிகரமாக, தரையிறக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கடந்த மாதம் 24ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்ட இவ் விண்கலம், சனிக்கிழமை அன்று நிலவின் நீள்வட்டப்பாதைக்குள் நுழைந்ததை தொடர்ந்து, படிப்படியான நடவடிக்கைகள் மூலம் லேண்டர் தரையிறக்கப்பட்டுள்ளது.

இந்த லேண்டரானது 2 கிலோ மீற்றர் வரையில் நிலவின் மேற்பரப்பில் துளையிட்டு, மாதிரிகளை சேகரித்துக் கொண்டு பூமிக்கு திரும்பும் எனக் கூறப்படுகிறது. 1976 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நிலவிலிருந்து மாதிரிகளை எடுத்துக் கொண்டு, பூமிக்கு திரும்பும் முதல் விண்கலம் சீனாவின் சாங் இ-5 ஆக இருக்கக் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## 4 முதல் 6 ஆண்டுகளுக்குள் மனிதனை செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பும் திட்டம் சாத்தியமாகலாம்

அடுத்த 4 முதல் 6 ஆண்டுகளுக்குள் மனிதனை செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பும் திட்டம் சாத்தியமாகலாம் என, ஸ்பேஸ் எக்ஸின் (SpaceX) நிறுவனர் எலான் மஸ்க் (Elon Musk) தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றபோதே அவர் இவ்வாற தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் சுற்றுவட்டப்பாதை அடிப்படையில் புவியும், செவ்வாய் கிரகமும் 26 மாதங்களுக்கு ஒருமுறை ஒரே நேர்க்கோட்டில் சந்திக்கின்றன. எனவே அதனை கருத்தில் கொண்டு அடுத்த 2 ஆண்டுகளில், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஆளில்லா விண்கலம் செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பப்படும் என்றார்.




## இத்தாலியில் அப்பிள் நிறுவனத்திற்கு 12 மில்லியன் டொலர்கள் அபராதம்!

பல ஐ.:.போன் மொடல்கள் வோட்டர் ரெசிஸ்டன்ட் (water resistant) எனப்படும் நீர்காப்புத் தன்மை கொண்டவை என விளம்பரம் செய்யப்பட்டதாகவும், சில குறிப்பிட்ட சூழல்களில் மட்டுமே அவ்வாறு பாதுகாப்பாக இருக்கும் என்பதை அப்பிள் நிறுவனம் விளம்பரப்படுத்த தவறி விட்டதாகவும் இத்தாலிய வர்த்தக ஒழுங்குமுறை ஆணையம் கூறியுள்ளது.

மேலும் வோட்டர் ரெசிஸ்டன்ட் என விளம்பரம் செய்துவிட்டு, திரவங்களால் சேதமடைந்தால் வோரண்டி பொருந்தாது என டிஸ்கிளெய்மரில் கூறுவது வாடிக்கையாளர்களை ஏமாற்றும் வேலை என்றும் இத்தாலிய வர்த்தக ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது. இந் நிலையில் அப்பிள் நிறுவனத்திற்கு 12 மில்லியன் டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



**உலகம் ஒரு விசித்திரமான கல்லூரி. இங்கே பாடம் சொல்லிக்கொடுத்துத் தேர்வு வைப்பது இல்லை. தேர்வு வைத்த பிறகே பாடம் கற்பிக்கப்படுகிறது.**

**கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக் காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்.**

# விளையாட்டு செய்திகள்

## இலங்கை கிரிக்கட் அணியின் புதிய தெரிவுக்குழு

இலங்கை கிரிக்கட் அணியின் புதிய தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். அதன்படி, குழுவின் தலைவராக அசந்த டி மெல் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய உறுப்பினர்களாக சமிந்த மெந்திஸ், பிரமோத்ய விக்கிரமசிங்க, எம்.எ.டயில்யு. ஆர் மதுரசிங்க, டி.நில்மினி குணரத்ன, ஹேமந்த தேவப்பிரிய மற்றும் எஸ்.எச்.யு கர்னேன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கட் சபை தெரிவித்துள்ளது. இந்த குழுவிற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

Sri Lanka Cricket

## ஜப்னா ஸ்டேலியன்ஸ் அணி 5 விக்கட்டுகளால் வெற்றி

IPL தொடரின் 9 ஆவது போட்டியில் ஜப்னா ஸ்டேலியன்ஸ் அணி வெற்றிப் பெற்றுள்ளது. கோல் கிளேடியேட்டர்ஸ் அணிக்கும் ஜப்னா ஸ்டேலியன்ஸ் அணிக்குமிடையில் இடம்பெற்ற இந்த போட்டியில் ஜப்னா ஸ்டேலியன்ஸ் அணி 5 விக்கட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

JAFFNA STALLIONS

## புதிய சாதனை படைத்தார் கிறிஸ்டியானோ றொனால்டோ !

போர்த்துக்கல்லைச் சேர்ந்த பிரபல காற்பந்து வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ (Cristiano Ronaldo) தொழில்முறை போட்டிகளில் தனது 750வது கோலை அடித்து புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். இத்தாலியின் யுவன்டஸ் கிளப் அணிக்காக விளையாடி வரும் அவர், நடைபெற்ற டைனமோ கீவ் அணிக்கு எதிரான சாம்பியன்ஸ் லீக் போட்டியில் இச் சாதனையை படைத்துள்ளார்.

மேலும், சம்பியன்ஸ் லீக் குரூப் சுற்று போட்டிகளில் தனது 71ஆவது கோலை பதிவு செய்த றொனால்டோ, அதிக கோல்கள் அடித்த மெஸ்ஸியின் சாதனையையும் முறியடித்தார். மேலும் இப் போட்டியில் கள நடுவராக செயற்பட்ட ஸ்டெபனி ப்ரபார்ட், ஆண்கள் சம்பியன்ஸ் லீக் தொடரில் பணியாற்றிய முதல் பெண் நடுவர் என்ற பெருமையை பெற்றார்.



## தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக 2 போட்டிகளில் ஜடேஜா விலகல்!

தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவுஸ்திரேலியாவிற்கு எதிரான, மீதமுள்ள இரண்டு போட்டிகளிலும் ஜடேஜா பங்கேற்கமாட்டார் என பிசிசிஐ தெரிவித்துள்ளது. அவருக்கு பதிலாக, வேகப்பந்து வீச்சாளர் ஷ்ரதுல் தாகூர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். நடைபெற்ற இருபதுக்கு 20 போட்டியில், அதிரடியாக ஆடிய ஜடேஜா 44 ஓட்டங்களைக் குவித்தார்.

இப் போட்டியில் துடுப்பாட்டத்தின் போது அவரது தலையில் பந்து பட்டு காயம் ஏற்பட்டது. இதையடுத்து, ஜடேஜா மருத்துவ கண்காணிப்பிலுள்ளதால், தொடரின் மீதமுள்ள போட்டிகளில் பங்கேற்கமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## அவுஸ்திரேலியா அணிக்கெதிரான முதல் இருபதுக்கு 20 போட்டியில் இந்திய அணி வெற்றி

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கான்பெராவில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் வந்து வீச்சை தெரிவு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 161 ஓட்டங்களைப் பெற்றது.

அந்தவகையில் 162 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு விளையாடிய அவுஸ்திரேலிய அணி, 7 விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களுடன் சுருண்டது. இப் போட்டியில் தமிழக வீரர் நடராஜன் மற்றும் யுவேந்திர சகல் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்திய அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## சச்சினின் மற்றுமொரு சாதனை கோலியினால் முறியடிப்பு

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் வேகமாக 12 ஆயிரம் ஓட்டத்தை கடந்தவர் எனும் சாதனையை படைத்து இருந்த இந்திய அணியின் முன்னாள் வீரரான சச்சின் டெண்டுல்கரின் சாதனையை இந்திய அணி தலைவர் விராத் கோலி முறியடித்துள்ளார் . கோலி தமது 242 ஆவது போட்டியிலே 12 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும் .

இதற்கமைய ஒரு நாள் போட்டியில் அதிக வேகமாக 12 ஓட்டங்களை கடந்தவர் எனும் சாதனையை படைத்துள்ளார் . சச்சின் இச்சாதனையை 300 ஆவது போட்டியிலே நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும் .

# உலக செய்திகள்

## ஆர்மீனியா-அஜர்பைஜன் இடையேயான மோதல்

ஆர்மீனியா உடனான நாகோர்னோ-கராபாக் பகுதி ஆக்கிரமிப்பு தொடர்பான மோதலில், 2,783 வீரர்கள் உயிர்த்தியாகம் செய்ததாக அஜர்பைஜான் அறிவித்துள்ளது. இதுதொடர்பான அறிவிப்பில், 103 பேரின் உடல்கள் அடையாளம் காண முடியவில்லை எனவும், 100-க்கும் மேற்பட்ட வீரர்கள் காணவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தேசத்திற்கான போரில் ஆர்மீனியாவிற்கு எதிராக, தங்களது வீரர்கள் தைரியத்தையும், வீரத்தையும் வெளிக்காட்டியதாக அஜர்பைஜன் குறிப்பிட்டுள்ளது. முன்னதாக, இந்த மோதலில் 2,137 ஆர்மீனிய வீரர்கள் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



## 100 நாட்களுக்கு முகக் கவசத்தை அணியுமாறு அமெரிக்க மக்களுக்கு ஜோ பைடன் வேண்டுகோள்!

100 நாட்களுக்கு முகக் கவசத்தை அணியுமாறு அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்கவுள்ள ஜோ பைடன் அந் நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். பதவியேற்றதும் இதனை அமுல்படுத்த இருப்பதாகவும் ஜோ பைடன் கூறியுள்ளார். கொரோனாத் தொற்றானது மிகப்பெரிய அளவில் அமெரிக்காவில் பரவி வரும் நிலையில் முகக்கவசம் மூலமே மக்களை பாதுகாக்க முடியும் என்று ஜோ பைடன் பிரசாரம் செய்து வருகிறார். குறிப்பாக முகக் கவசம் அணியாதவர்கள் அடுத்தவர்களின் உயிர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாகவும் முகக்கவசம் அணிவது தேசியக் கடமை என்றும் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.




## 2021 மனிதாபிமான பேரழிவு ஆண்டாக காணப்படும் – உலக உணவு திட்டம்

2021 மனிதாபிமான பேரழிவு ஆண்டாக காணப்படப்போகின்றது என உலக உணவுதிட்டம் எச்சரித்துள்ளது. இந்த தருணத்தில் காணப்படும் விடயங்களை வைத்து பார்க்கும்போது 2021 மனிதாபிமான பேரழிவாக காணப்படப்போகின்றது என உலக உணவுதிட்டத்தின் தலைவர் டேவிட் பீஸ்லே தெரிவித்துள்ளார். பல நாடுகளின் கதவை பஞ்சம் தட்டுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐநா ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் உலகம் 2021 இல் மிகமோசமான மனிதாபிமான நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடாலாம் என உலக உணவுதிட்டத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். எங்களால் அனைத்திற்கும் நிதி வழங்க முடியாது இதன் காரணமாக நாங்கள் முன்னுரிமைக்குரிய விடயங்களை தீர்மானிக்கவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை கொரோனா வைரஸ் மருந்திற்காக செல்வந்தவர்களும் வலுவானவர்களும் ஏழைகளை மிதிக்கின்ற உலகத்தை எங்களால் அனுமதிக்க முடியாது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். இது சர்வதேச நெருக்கடி இதற்கான தீர்வுகள் சமமாகவும் உலகத்தின் நன்மைக்காகவும் பகிரப்படவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.






## கண்ணாடி மீன் தொட்டிக்குள் கிறிஸ்மஸ் தாத்தா!

ஜப்பான் - டோக்கியோவிலுள்ள மீன் அருங்காட்சியகத்தில் கிறிஸ்துமஸ் தாத்தா போல வேடமிட்ட நீச்சல் வீரர் ஒருவர் கண்ணாடி மீன்தொட்டிக்குள் மீன்களுக்கு மத்தியில் நீந்தி பார்வையாளர்களை உற்சாகபடுத்தியுள்ளார். விடுமுறை காலத்தை வரவேற்கும் வகையில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ் தாத்தா வேடமிட்ட நபர், கண்ணாடி மீன் தொட்டிக்குள் நீந்தும் நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





## மியான்மரில் பாம்புகளை தனது பிள்ளைகளாக வளர்க்கும் பௌத்த துறவி!

மியான்மரை சேர்ந்த பௌத்த துறவியொருவர், கொடிய பாம்புகளை தனது பிள்ளைகளாக நினைத்து வளர்த்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ள. 69வயதான குறித்த துறவி வீடுகள் உள்ளிட்ட இடங்களில் பிடிபடும் பைத்தான், வைபர், கோப்ரா உள்ளிட்ட பாம்புகளை வாங்கி வந்து யாங்கூனிலுள்ள ஆசிரமத்தில் வளர்க்கிறார். பாம்புகள் கொல்லபடுவதை தடுப்பதற்காகவும், சீன பாரம்பரிய மருந்துக்காகவும் கள்ளசந்தையில் விற்க கடத்தபடுவதை தடுப்பதற்காகவும் இதுபோல செய்வதாக தெரிவிக்கும் அவர், பாம்புகளை கண்டு அஞ்சாமல் தோளில் மாலையாக போட்டு அமர்கிறார்.



## ஊரடங்கால் பிரித்தானியாவில் உணவுக்குப் போராடும் மக்கள்!

பிரித்தானியாவில் கொரோனாத் தொற்றுப்பரவலின் எதிரொலியாக, ஏராளமான மக்கள் உணவுக்காக போராடுவதாக, அங்குள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கவலை தெரிவிக்கின்றன. பிரித்தானியாவில் கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுக்க ஊரடங்கு நடைமுறைப்படுத்தபட்டதால் ஏராளமானோர் வேலை இழந்துள்ளனர்.

பித்தானியாவில் வேலையில்லாதோர் விகிதம் 4.8% உயர்ந்திருப்பதாக அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் வேலையின்மை எட்டு விழுக்காடாக உயரும் எனக் கணிக்கப்பட்டிருப்பதால், அதை எதிர்கொள்ள அரசு, அவசர வேலை வாய்ப்பு மானியத் திட்டத்தை மார்ச் வரை நீட்டித்துள்ளது. இதனால் அறக்கட்டளைகளால் இலவச உணவு வழங்கும் இடங்களுக்கு மக்கள் படையெடுப்பது அதிகரித்துள்ளது.



## Summit of Mount Everest (Nepal & China)

உலகின் உயரமான மலை. கடல் மட்டத்திலிருந்து மிக உயர்ந்த இடம் உள்பட பல்வேறு பெருமைகளை கொண்டது எவரெஸ்ட் சிகரம். நேபாளம் மற்றும் சீனாவின் எல்லைக்கோடும் இதுவே!

## The Dead Sea (Israel & Jordan)

உலகின் மிகத் தாழ்வான பகுதி. கடல் மட்டத்திலிருந்து 400 மீட்டர் கீழே அமைந்துள்ளது. மற்ற கடல்களை விட 10 மடங்கு உப்பு அதிகமானது. அதனால் இங்கு யாரும் மூழ்க மாட்டார்கள். விரலைகூட அசைக்காமல் மிதக்க முடியும். இது போன்ற ஆச்சரியங்களால் சுற்றுலாவாசிகள் விரும்பும் இடமாகிவிட்டது.




## Cabo Da Roca (Portugal)

போர்ச்சுக்கல்லுக்கு மட்டுமல்ல. ஐரோப்பாவுக்கும் இதுவே மேற்கு எல்லை. கடல் மற்றும் மலையின் அமர்க்களத் தோற்றமே. சுற்றுலாவாசிகளை அதிகம் கவர்கிறது.

## Punta de Tarifa (Spain)

ஜிப்ரால்டர் ஜலசந்திக்கு அழகு சேர்க்கும் ஐரோப்பாவின் தெற்கு எல்லை. இந்த இடத்தில் நீங்கள் நின்றால். உங்களுக்கு இடது புறம் மத்திய தரைக்கடலும் வலது புறம் அட்லாண்டிக் பெருங்கடலும் உங்கள் முன் ஆபிரிக்காவின் மொராக்கோவும் இருக்கும்.




## கடலுக்கு அடியில் 8,500 அடி ஆழத்தில் வாழும் மர்ம ஜந்து !!!

கியூபா நாட்டுக்கு அருகாமையில் பஹமாஸ் ஏனும் நாடு உள்ளது. சிறியதும் பெரியதுமாக சுமார் 3,000 தீவுகளை உள்ளடக்கிய நாடே பஹமாஸ் ஆகும். அத்தீவுகளின் கடலில் சில விஞ்ஞானிகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் கமரா பொருத்தப்பட்ட இயந்திரம் ஒன்றை கடலுக்கு அடியில் செலுத்தி ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர்.

கடல் மேல்மட்டத்தில் இருந்து சுமார் 8,500 அடி ஆழத்தில் இப்பரிசோதனைகள் நடைபெற்றது. திடீரென ஒரு நாள் கடலுக்கு அடியில் இருந்த இயந்திரத்தில் இருந்து காட்சிகள் கிடைக்கப்பெறவில்லை. இதனை அடுத்து இந்த இயந்திரத்தை வெளியே எடுத்துப் பார்த்தால் விஞ்ஞானிகள் அதிர்ந்து போனார்கள். காரணம் கமராவின் வயர்கள் கடிக்கப்பட்டு துண்டாடப்பட்டிருந்தன.




அக்கடலில் அவ்வளவு ஆழத்தில் சுறா மீன்கள் வசிக்க முடியாத நிலை உள்ளது. அப்படி என்றால் எந்தவகையான மீன்கள் இவற்றைக் கடிக்கும் தன்மை கொண்டவை என்று அவர்கள் குழம்பிப்போனார்கள். இறுதியில் இயந்திரத்தைச் சரிசெய்து திரும்பவும் அதே இடத்தில் இறக்கினார்கள்.

ஆனால் இம் முறை, அந்த மர்ம ஜந்து மாட்டிக்கொண்டது. காரணம் அது மீண்டும் இந்த இயந்திரத்தை கடிக்க வந்தபோது, அதன் உருவம் கமராவில் பதிவாகியது. அது மட்டுமல்லாது சுமார் ஒன்றரை அடி நீளமான இந்தப் புதுவகையான ஜந்துவையும் அவர்கள் சாமர்த்தியமாகப் பிடித்துவிட்டார்கள். அதன் கால்களும் மற்றும் வாய்ப் பகுதிகளிலும் காணப்படும் கூரிய நகங்கள், வாள்போன்றவை என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

7 கால்களைக் கொண்ட இந்த ஜந்து இதுவரை பூமியில் கண்டுபிடிக்கப்படாத ஒரு இனம் ஆகும். பாத்திநோமஸ் ஜயன்டியஸ் என்று அழைக்கப்படும் இனத்தில் இதனை இணைத்துள்ளார்கள். விஞ்ஞானிகள். கடலுக்கு அடியில் சுமார் 8,500 அடி ஆழத்தில் வாழும் இந்த உயிரினம், தனது குடியிருப்புக்கு அருகாமையில் வித்தியாசமான ஒரு பொருள் இருப்பதை உணர்ந்து அதனை தாக்கியுள்ளது. இது வசிக்கும் பிரதேசத்தில் எப்போதும் வெளிச்சம் இருப்பதே இல்லை. காலம் முழுவதும் இருட்டில் வாழும் இனங்களில் இதுவும் ஒன்று ஆகும்.



South Africa பாலைவன பகுதிகளில் காணப்படும். கோல்டன் அர்மாடில்லோ பல்லி. இது பார்பதற்கு கற்பனை கதைகளில் வரும் Dragonனின் தோற்றத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




***piebald ball* என்றழைக்கப்படும் ஒருவகை மலைப்பாம்பு**

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 06.12.2020 அன்று வெளியிடப்பட்டது.